Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**TOSHIBA**

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

**IIS Office Automation**

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 26 (18.03.2004) வியாழக்கிழமை இதழ் :170

# கருணா உருவாக்கியுள்ள பதற்ற நிலைமை; பாரிய அரசியல் - ராணுவ நெருக்கடியல்ல!

## புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேட்டி



(லண்டன்)

**மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத்தில் கருணா உருவாக்கியுள்ள பதற்றநிலை, விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஒரு பாரிய அரசியல் - இராணுவ நெருக்கடியல்ல எனவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலோ, தமிழர்களின் தேசியப் பிரச்சினையிலோ இது எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை என்றும் தற்போது கிழக்கில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.**

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது குறித்து முதற் தடவையாக, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வழங்கியுள்ள செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஈழத் தமிழர்களின் போராட்டம் குறித்தும் போராட்ட வரலாறு குறித்தும் மிக ஆழமான அனுபவமும் தெளிவும் உள்ள ஒருவர் என்ற வகையில், இது குறித்து உறுதியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செயற்படும் நிலைமை, கொழும்பு ஊடகங்கள் கூறுவது போன்று, விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஒரு பாரிய அரசியல் மற்றும் போராட்ட நெருக்கடி அல்ல.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில், இதுபோன்ற காட்டிக்கொடுப்புக்கள், துரோகச் செயல்கள், நம்பிக்கைத் துரோகமிழைத்தல் என்பனவற்றை, எமது அமைப்பு நிறையவே சந்தித்துள்ளது.

இதுபோன்ற விசமச்செயற்பாடுகள் எழுந்த போதெல்லாம், எமது தலைமை, இவற்றைச் சந்தித்து, எதிர்கொண்டு, நெருக்கடிகளைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 75 வீதமானோர் யுத்தத்திற்கு எதிர்ப்பு

# சமாதான முயற்சிகளில் பிரதமர் ஈடுபடுவதற்கே அதிக ஆதரவு!

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கருத்துக் கணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை விட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுவதையே அதிகளவிலான மக்கள் விரும்புவதாகவும், 75 சதவீதமான மக்கள் நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்ததாகவும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய கருத்துக் கணிப்பிலிருந்து தெரியவந்துள்ளது.


இந்தக் கருத்துக் கணிப்பில் -

46 வீதமானோர் பிரதமரின் சமாதான முயற்சியை வரவேற்றுள்ளனர். ஜனாதிபதியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என தமிழீழத்தை கூறுபோடமுடியாது!

## கவிஞர் காசி ஆனந்தன் அறிக்கை



தமிழீழத்தை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் என்று கூறுபோடுவதையோ தமிழீழக் கொள்கையைக் கைவிடுவதையோ ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழீழ மக்கள் கடைசி மூச்சுவரை தமிழீழக் கொள்கைக்காகவே வாழ்வார்கள்.

இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் மட்டக்களப்பு நிலை குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ மக்கள் 17,700 இற்கு மேற்பட்ட மாவீரர்களைக் கொடுத்து, மட்டக்களப்பிற்கான போரையோ அன்றி யாழ்ப்பாணத்திற்கான போரையோ நடத்தவில்லை. அவர்கள் தமிழீழத்திற்கான போரையே நடத்தினார்கள்.

தமிழீழத்தை மட்டக்களப்பு என்றோ யாழ்ப்பாணம் என்றோ

# வன்னி மாவட்டத் தேர்தல் தொடர்பாக

விரும்புவதாகவும், 75 சதவீதமான மக்கள் நாட்டில் யுத்தம் ஏற்படுவதற்கு எதிராகக் கருத் முயற்சியை வரவேற்றுள்ளனர். ஜனாதிபதியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மாவட்டத் தேர்தல் தொடர்பாக ராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை!

(வவுனியா)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வசிக்கும் வாக்காளர்களுக்கு, வாக்களிக்க வசதிசெய்து கொடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வவுனியா அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் வாக்களிப்பது தொடர்பான கலந்துரையாடலே நேற்று இடம்பெற்றது.

மக்கள் எதுவித இடையூறும் இன்றி தமது வாக்குகளை அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து இந்தச் சந்திப்பில் தெளிவாக ஆராயப்பட்டது.

வன்னித் தேர்தல் தொகுதியின் தெரிவத்தாட்சி அலுவலரும், வவுனியா மாவட்ட அரச

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதி மக்கள்

# வாக்களிப்பதற்கான ஒழுங்குகள் குறித்து 22 ஆம் திகதிக்கு முன் அறிவிக்க வேண்டும்!

## தேர்தல் ஆணையாளர் உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஒழுங்குசெய்வது தொடர்பான இறுதி முடிவை 22 ஆம் திகதிக்கு முன் தனக்கு அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அரச அதிபர்கள் மற்றும் இராணுவத் தளபதிகள் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து தமக்கு அறியத்தரல் வேண்டும் எனவும் அவர் கோரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொடுத்து, மட்டக்களப்பிற்கான போரையோ அன்றி யாழ்ப்பாணத்திற்கான போரையோ நடத்தவில்லை. அவர்கள் தமிழீழத்திற்கான போரையே நடத்தினார்கள்.

தமிழீழத்தை மட்டக்களப்பு என்றோ யாழ்ப்பாணம் என்றோ கூறுபோடுவோரையும், தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதையும் நான் எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளமாட்டேன். தமிழீழ மக்கள் தங்கள் கடைசிமூச்சிருக்கும் வரை தமிழீழக் கொள்கைக்காகவே வாழ்வார்கள்.

அன்று வி.நல்லையா என்னும் நாடாளுமன்ற உறுப்பினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கருணாவின் முழவுக்கும் எமக்கும் தொடர்பில்லை!

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் தளபதி கருணா, புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்றமைக்கும் எமக்கும் எந்தவித தொடர்புமில்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜவ்ரி லன்ஸ்ரிட் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்து செயற்படுவதற்கு அமெரிக்கா பொறுப்பு என தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது ஏற்புடைய ஒன்றல்ல.

இச்சம்பவத்திற்கும் அமெரிக்காவிற்கும் எதுவித தொடர்பும் இல்லை. இது குறித்துப் பரப்பப்படும் வதந்திகளுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் கிடையாது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்ற வகையில் பரப்பப்பட்டு வருகின்றமை - விஷமத்தனமானவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்....
your friend in the skies...

முதலாம் ஆண்டை வெற்றிகரமாக நிறைவுசெய்து 2 ஆம் ஆண்டில் காலடி பதிக்கும்

முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட, குளிரூட்டப்பட்ட (Shopping Complex)

# Annai Nagga Food City

- ❖ சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள்
- ❖ பல வகையான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகள்
- ❖ இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், பழரசங்கள்
- ❖ ஆங்கில மருந்து வகைகள் (Pharmaceuticals)
- ❖ அன்பளிப்பு, அழகுசாதன வாசனை திரவியங்கள்
- ❖ அனைத்து பாடசாலைப் பொருட்கள்
- ❖ சிறுவர் சிறுமியருக்கான அனைத்துப் பொருட்கள்
- ❖ நவீன டிசைன்களில் நங்கையர் விரும்பும் கண்கவர் தங்க நகைகள்
- ❖ இவை மட்டுமன்றி மங்கையர்களின் – வேலைப் பளுவைக் குறைக்கும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்




இப்பொழுது

1 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

என்றுமில்லாத வகையில் விசேட விலைக்கழிவு

# Annai Nagga Food City இல்



- ❖ ஒன்றை வாங்கி மற்றொன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
- ❖ குலுக்கல் முறையிலான பரிசில்கள்
- ❖ கடன் அட்டை (Credit Card) மூலம் பொருட்களை பெறும் வசதி
- ❖ இலவச விநியோக சேவை (யாழ். மாநகரசபை எல்லைக்குள்)
- ❖ **Nilkamal** வீட்டுத் தளபாடங் கள் அதிகூடிய விலைக்கழிவில்

**Hemas** நிறுவனத்தின் ஆதரவுடன் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு சலரோகம், குருதி அமுக் கம், அஸ்மா போன்ற நோய்க ளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் வழங்கப்படும்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

இவை அனைத்தும் ஆண்டு நிறைவை முன்னிட்டு வாடிக்கை யாளர்களுக்கு வழங்கும் விசேட சலுகைகளாகும்.

இன்றே விரையுங்கள்

175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

Surabi Graphics

## லங்காதீப பத்திரிகை ஆசிரியரை

# விமல் வீரவன்ச மிரட்டியதற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

லங்காதீப பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிங்க ரணதுங்கவை - ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தொலைபேசிமூலம் பயமுறுத்துவதைத் தாம் கண்டிப்பதாக, சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பத்திரிகைகளில் வெளிவரும், கட்டுரைகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்பாக அரசியல்வாதிகள் பயமுறுத்தினால், அவர்கள் சுதந்திர ஊடகத்தை விரும்பவில்லையென்பதனையும், இதன்மூலம் கட்டாயமாக பத்திரிகைத் தணிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்பதனையும் இவர்களது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல்வாதிகளுக்கு எதிராகவோ அல்லது தனிநபருக்கெதிராகவோ ஊடகங்கள் கட்டுரைகளை அல்லது விளம்பரங்களைப் பிரசுரித்தால், அவர்கள் சுதந்திரப் பத்திரிகை ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை மேற்கொள்ளலாம்.

ஆனால், பத்திரிகையில் வெளிவரவுள்ள இவைபோன்ற கட்டுரைகளையோ அல்லது விளம்பரங்களையோ பிரசுரிக்காமல் பின்வாங்குமாறு செய்யச் சொல்லி, பத்திரிகையின் பிரதம ஆசிரியரைப் பயமுறுத்துவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. விமல் வீரவன்சவின் இந்த தொலைபேசி மிரட்டலானது, அர்த்தமற்ற ஒன்றாகும்.

அத்துடன், சகல அரசியற்கட்சித் தலைவர்களும் மிகவும் பொறுப்புணர்வுடன் ஊடகத்துறை தொடர்பில் நடந்துகொள்ள வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் பத்திரிகையாளர்களை மற்றும் பிரதம ஆசிரியர், ஊடக நிறுவனங்கள் போன்றவற்றை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. விசேடமாகத் தற்போதைய தேர்தல் காலத்தில் இது தவிர்க்கப்படவேண்டுமெனவும் சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுள்ளது.

## தேர்தலில் பிக்குகள்; மகா நாயக்கர்கள் அனுமதி!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பௌத்த பிக்குகள் போட்டியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் தமது முடிவை வாபஸ்பெற்றுள்ளனர்.

ஜாதிகஹெல உறுமயவின் செயலாளர் உடுகம தம்மாலோஜித தேரர் நேற்றுமுன்தினம் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து, தாம் தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கங்கள் குறித்து விளக்கிக் கூறினார்.

சிங்கள சமூகத்தையும், பௌத்த தர்மத்தையும் பாதுகாக்கும் நோக்குடனே தாம் தேர்தலில் போட்டியிடுவதாக மகாநாயக்கர்களிடம் அவர் தெரிவித்திருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட மகாநாயக்கர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான அங்ககாரத்தை அவர்களுக்கு வழங்கினர்.

இதேவேளை - பௌத்த பிக்குகள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதும் தேர்தலில் போட்டியிடுவதும் பௌத்த தர்மத்தை பாதிக்கும் செயல் என்றும் தேர்தலில் போட்டியிடுவதை நிறுத்தவேண்டும் என இவர்கள் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## தேர்தல் தொடர்பாக அதிகாரிகள் சந்திப்பு

யாழ்.மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கே இந்தச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.செயலகத்தில் இடம் பெற்ற அந்தச் சந்திப்பில் அரச அலுவலரும், மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலருமான செ.பத்மநாதன், யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், பிரதேச செயலர்கள் மற்றும் யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், தேர்தல் காலங்களில் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பாகவும், வாக்குச்சாவடிகளில் பொலிஸார் தேர்தலுக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பாகவும், பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.



யாழ். பல்கலைக்கழக விசேட அனுமதியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் மகஜர் ஒன்றினை கையளிப்பதைக் காணலாம்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பிணையில் செல்ல அனுமதி

ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் உடமைகளைச் சேதமாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் தசநாயக்கவைப் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஒருவரின் வீட்டினைச் சேதப்படுத்தியதுடன் அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் தசநாயக்க உட்பட மூவர் கைது செய்யப் பட்டு, புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது - நீதிவான் மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 இலட்சம் ரூபா சரீர பிணையிலும் செல்வதற்கு அனுமதித்தார்.

இதேவேளை - இறம்புக்கணைப் பிரதேச சபையின் தலைவர் தேர்தல் வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு, எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (01)

## தென்னிலங்கையிலிருந்து வரவுள்ள தேர்தல் கண்காணிப்பாளர்கள்

தேர்தல் காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கென பெருமளவு தேர்தல் கண்காணிப்பாளர்கள் தென்னிலங்கையிலிருந்து அனுப்பப்படவுள்ளனர்.

100 சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் உட்பட, மொத்தம் 20 ஆயிரம் கண், காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

தற்போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் 13 பேர் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும், தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பெண்களை இழிவுபடுத்துவதாக உள்ளது

### ஐ.தே.க. கண்டனம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவித்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம்- பெண்களை இழிவுபடுத்துவதாகவுள்ளது என, ஐக்கிய தேசியக் கட்சியின் பெண்களுக்கான தேசியக் கொள்கையின் தலைவி இந்திரா இரிய கொல்ல தெரிவித்தார்.

கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பெண்களை இழிவுபடுத்துவதாகவுள்ள அதே நேரம் - பெண்கள் தொடர்பான தெளிவான கொள்கைகள் அதில் உள்ளடக்கப்படவில்லை.

குறிப்பாகப் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்வாறு அணுகுவது தொடர்பான விடயங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை.

கூட்டுமுன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஐந்து பிரிவுகளை உடையதாகவுள்ளது. அவற்றில் ஐந்து சிறிய பிரிவுகளில் பெண்கள், சிறுவர் தொடர்பான விடயங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பகுதியும் விசேட பகுதிகள், விசேட நடவடிக்கைகள் என்பன பற்றிக் குறிப்பிடுகின்றனவே தவிர, பிரச்சினைகள் எவ்வாறு இனங்கண்டு தீர்க்கப்படும் என்பது கூறப்படவில்லை.

இலங்கையில் பெண்களின் தேவை இவ்வளவுதான் என்று நியாயப்படுத்துவார்களானால், அதற்காக அனைத்துப் பெண்களும் பாரியளவில் கவலைப்படவேண்டியிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## முஸ்லிம் இளைஞர் அம்பாறையில் கொலை

(கொழும்பு)

அம்பாறை ஈரமுனைப் பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் முஸ்லிம் நபரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் அரசியல் நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட கொலை எனத் தெரியவருகிறது.

ரவூப் ஹக்கீமின் குழுவினர், இந்தக் கொலை நடவடிக்கைகளை அதாவுல்லா குழுவினரே மேற்கொண்டிருக்கலாம் என்ற பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். இந்தக் கொலைச்சம்பவத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் கூட்டங்களில் பிரசாரம் செய்ய இருப்பதாக அதாவுல்லா தரப்பு இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்மீது குற்றம் சுமத்தியுள்ளது. (01)

## ஜே.வி.பியினர் ஆயுதங்களை வைத்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் வழிமுறைகளுக்குத் திரும்பி விட்டதாக ஜே.வி.பியினர் கூறுகின்றபோதும் அவர்களிடம் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் சேனாரட்ண இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தேசியப் புலனாய்வுத்துறையின் அறிக்கையின் படி ரி 56 துப்பாக்கிகள் - 78, எஸ்.எல்.ஆர் - 60, எஸ் 84 -36, எஸ்.எம்.ஜி - 13, ரி 81 துப்பாக்கிகள் - 08, எல்.எம்.ஜி - 11 எவ்.என்.சி. 6, எம்.பி 5 - 3, எஸ்.ஏ.ஆர். 04, எம்.ஜி. 3 -01, பிஸ்டல் 02 உட்பட 222 ஆயுதங்கள் ஜே.வி.பியிடம் உள்ளன.

இதனைவிடவும் மேலதிக ஆயுதங்கள் ஜே.வி.பியிடம் உள்ளன. சோமவன்ச அமரசிங்கவே நந்தனமாரி யசிங்க என்பவரைக் கொலை செய்ததாக றோகாண விஜயவீர தெரிவிததுள்ளார்.

கீர்த்தி விஜயபாகு, பிரியசிறி பெர்னாண்டோ போன்றவர்கள் கொள்ளையடித்த, நகைகளை ஏனையவர்களுக்குத் தெரியாமல் சோமவன்ச அமரசிங்க கையாடியதாக வெளிவந்ததையடுத்தே, ஜே.வி.பியைச் சேர்ந்த சூரியதாஸ என்பவரைச் சோமவன்ச கொலைசெய்தார்.

1992 ஆம் ஆண்டு சோமவன்ச செய்த கொலை தொடர்பாக சாட்சி சொல்லப்பட்டதையடுத்து, சோமவன்ச அமரசிங்க நாட்டை விட்டுத் தப்பிஓடியவர். தற்போது தான் குற்றமற்றவர் எனக் கூறியிருக்கிறார்.


1971 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவை கைதுசெய்து ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தவரும் ஜனாதிபதியின் கணவரான குமாரதுங்காவைக் கொலை செய்துவிட்டு சோமவன்ச அமரசிங்க நாட்டைவிட்டு, தப்பியோடி, மீண்டும் தேர்தலில் கலந்து கொள்ள வந்துள்ளார்.

இவ்வாறு தனது கணவனைக் கொலை செய்த ஜே.வி.பியினருடன் ஜனாதிபதி கூட்டுச் சேர்ந்துள்ளார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

(01)


# வடக்கின் பெரும் போர் இன்று ஆரம்பம்!

## யாழ். மத்திய கல்லூரி



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்
வி.கே.சண்முகலிங்கம் (பயிற்றுநர்), இ.எப்.ஆர்.ஜெயகுமார் (அணிப் பொறுப்பாசிரியர்), ஆர்.மதுசன் (அணித்தலைவர்), கே.இராசதுரை (கல்லூரி அதிபர்), கே.றொகான் (அணியின் உபதலைவர்), வி.ரஜீவ்குமார், வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), எஸ்.சுரேஷ் மோகன் (மேலதிக பயிற்றுநர்).
நிற்பவர்கள் - இடமிருந்துவலம்
என்.துஷ்யந்தன், பி.ஜோன் பிறீனர், ஆர்.ஷியாம்றாஜ், எஸ்.சுரேஷ்றாஜ், எம்.ஜசோதரன், எப்.எக்ஸ்.மயூரன், எஸ்.தினேஸ், எஸ்.சத்தியன், வி.கீதமித்திரன், கே.கலிஸ்ரன், வி.கபில்தேவ், எ.ஜசிந்தன்.

## சென். ஜோன்ஸ் கல்லூரி



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்
வி.எஸ்.பி.துஷிதரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), ரி.மதன்ராஜ், ரி.சி.அன்ட்றூ (அணித்தலைவர்), எஸ்.தனபாலன் (கல்லூரி அதிபர்), சி.எம்.டினேஸ் (அணியின் உபதலைவர்), எஸ்.கிருஸ்ணகுமார், கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுநர்).
நிற்பவர்கள் - இடமிருந்துவலம்
பி.சகிந்தன், எ.மயூரதன், ரி.நிருபன், எ.அன்புஜன், எஸ்.சுதன், எம்.மயூரன், வை.தனுஜன், பி.கஜரூபன், பி.சஞ்சீயன், என்.நவகீதன், எ.கிரிசன், ரி.கிருசாந்.

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் - யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வருடாந்த மாபெரும் கிரிக்கெட் போர் (**Big Match**) இன்று தொடங்குகின்றது.

இவ்விரு கல்லூரி அணிகளுக்கும் இடையிலான இந்த கிரிக்கெட் போர் தொடங்கி இவ்வருடத்துடன் நூறாவது வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு, இவ்வருடத்திலிருந்து இரு அணிகளுக்குமான இந்த கிரிக்கெட் போட்டி மூன்று நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும், நாளைமறு தினமும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 10 மணிக்கு இரு அணிகளுக்குமிடையிலான ஆட்டங்கள் ஆரம்பமாகும்.


இதுவரை நடந்த போட்டிகளில் சென் ஜோன்ஸ் 32 இலும், மத்திய கல்லூரி 22 இலும் வெற்றிபெற்றுள்ளதோடு 35 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

அத்துடன், பத்துப் போட்டிகள் விளையாடப்படவில்லை. ஏழு போட்டிகள் முடிவேதும் தெரியாமல் இடை நிறுத்தப்பட்டன.

1904 ஆம் ஆண்டு தொடங்கிய படியால்தான் இந்த வருடத்துடன் இது நூறாவது போட்டியாக நடைபெறுகிறது. ஆனால், இன்று நடைபெறவுள்ள போட்டி சரியான கணிப்பின்படி 98 ஆவது போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இரு அணி வீரர்கள், பயிற்றுநர்களின் விபரங்கள் வருமாறு,

## அடுத்த இரு போட்டிகளில் நெஹ்ரா விளையாடமாட்டார்



கைவிரலில் காயமடைந்த வேகப் பந்துவீச்சாளர் நெஹ்ரா அடுத்த இரண்டு ஒருநாள் போட்டிகளில் ஆடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக ராவல்பிண்டியில் நேற்றுமுன்தினம் நடந்த 2 ஆவது ஒருநாள் போட்டியில் இவர் 10 ஓவர்கள் பந்துவீசி 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நெஹ்ரா, யுனுஸ்கானுக்கு எதிராக பந்துவீசியவேளை அவர் அடித்த பந்தை தடுத்துநிறுத்தியபோது அவரது ஆட்காட்டி விரலுக்கும், நடுவிரலுக்கும் இடையே காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. இவரது காயம் குணமடைய ஒருவாரம் பிடிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு

# பாகிஸ்தான் 12 ஓட்டங்களால் இந்திய அணியை தோற்கடித்தது!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் ராவல்பிண்டியில் நடந்த இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்தியா 12 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

முன்னதாக நாணயச்சுழற்சியில்



அப்ரிடி

வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி வீரர்கள் ஆரம்பம் முதலே இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை பொருட்டாக எடுக்காமல் விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர். ஐம்பது ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களைப் பெற்றது.

கடந்த ஒருவருட காலமாக சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த சயீட் அப்ரிடி இந்த இரண்டாவது போட்டிக்கு இர்பான் பர்கத்திற்குப் பதிலாக அணியில் இணைக்கப்பட்டிருந்தார். இவர் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 58 பந்துகளில் 10 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 80 ஓட்டங்களைக் குவித்தார். இவருடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இருந்த யசீர் ஹமீட் தனது பங்கிற்கு 86 ஓட்டங்களைப் பெற்றார். இவர்கள் இருவரும் இணைந்து ஆரம்ப இணைப்பாட்டமாக 138 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தான் அணிக்கு நல்ல அடித்தளமிட்டனர்.

இதன்பின்னர் வந்த பாகிஸ்தான் வீரர்களும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தனர். இதில் யூசுப் யுகானா 24 ஓட்டங்களையும், அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் 29 ஓட்டங்களையும், யுனுஸ்கான் 28 ஓட்டங்களையும், சொகெய்ப் மலிக் ஆட்டமிழக்காமல் 30, அப்துல் ரஸாக் ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஷிஷ் நெஹ்ரா 3 விக்கெட்டுக்களையும், யுவராஜ் சிங் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். மற்றைய ஆரம்பப் பந்து வீச்சாளர்களான சகீர்கான், பாலாஜி இருவரும் விக்கெட் எதுவும் எடுக்காததோடு அதிக ஓட்டங்களையும் தமது பந்துவீச்சில் விட்டுக்கொடுத்தனர்.

பதிலுக்கு 330 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத் தொடங்கிய இந்திய அணியின் ஆரம்பம் நன்றாக அமைந்தது. நட்சத்திர வீரர் டெண்டுல்கர் சதமடித்தபோதிலும், மற்றைய வீரர்கள் எவரும் சிறப்பாக விளையாடாத காரணத்தால் இவ்வணி 12 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இவ்வணி சார்பாக டெண்டுல்கர் 17 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 141 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம் இவர் தனது 37 ஆவது சதத்தைப் பெற்றதுடன் 13,000 ஓட்டங்களையும் பூர்த்திசெய்தார்.

மற்றைய வீரர்களான ஷேவாக் 26 ஓட்டங்களையும், கங்கூலி 38 பந்துகளில் 15 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 19 ஓட்டங்களையும், பவர் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சொகைப் அக்தார், மொகமட் சமி இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், சயீட் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும், சொகைப் மாலிக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இரு அணிகளும்



டெண்டுல்கர்

1:1 என்ற நிலையில் வென்று சம நிலையில் உள்ளன. மூன்றாவது ஒரு நாள் போட்டி நாளை பெஷாவரில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, டெண்டுல்கர் பெற்ற இந்த சதம் மூலம் பாகிஸ்தான் மண்ணில் சதம் அடித்த முல் இந்திய வீரர் என்ற பெருமையை டெண்டுல்கர் பெற்றார்.

கராச்சி போட்டியில் ராவிட் 99 ஓட்டங்கள் எடுத்து சதத்தைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியுடன் டெண்டுல்கர் 330 போட்டிகளில் கலந்துகொண்டதுடன், 13090 ஓட்டங்களை இதுவரை பெற்றுள்ளார்.

# இலங்கையுடனான 2 ஆவது இனிங்ஸ்; அவுஸ்ரேலியா 2 விக்கெட்டுக்களுக்கு 221!

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடந்துவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று அவுஸ்ரேலியா தனது இரண்டாவது இனிங்ஸில்



முரளீதரன்

இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக தனது முதலாவது இனிங்சை ஆடிய இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தபோதும் சமிந்த வாசுடன் பத்தாவது விக்கெட்டுக்காக இணைந்த முரளிதரன் ஜோடி இணைப்பாட்டமாக 79 ஓட்டங்களைத் தமக்குள் பகிர்ந்து கொண்டனர்.

1998-99 காலப்பகுதியில் பாகிஸ்தானுக்கெதிராக நடந்த போட்டியில் பத்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக ஹசான் திலகரட்ண, சஜீவ டி சில்வா ஜோடி பெற்ற 73 ஓட்டங்களை முரளிதரன் - வாஸ் ஜோடி இதன் மூலம் முறியடித்தது.

இலங்கை அணி சார்பாக முரளிதரன் 28 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களையும், வாஸ் 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஷேன் வோர்ன் 5 விக்கெட்டுக்களையும், கஷ்பிரோவிஷ் 4 விக்கெட்டுக்களையும், ஜிலெஸ்பி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தற்போது தனது இரண்டாவது இனிங்சை விளையாடிக் கொண்டிருக்கும் அவுஸ்ரேலியா 2 விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவுஸ்ரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான லாங்கர் 9, ஹைடன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் அதன்பின் கில்கிறிஸ்ட், மார்ட்டின் இருவரும் சிறப்பாக விளையாடி வருகின்றனர்.

கில்கிறிஸ்ட் 175 பந்துகளில் 140 ஓட்டங்களுடனும், மார்ட்டின் 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்ரேலியா தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் தேர்தல் ஆணையாளர் காங்கிரஸின் சார்பில் போட்டி!

முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் எம்.எஸ்.கில் காங்கிரஸ் சார்பில் டெல்கி மேல்சபை தேர்தலில் போட்டியிடுகிறார். பாரதீய ஜனதா கட்சி இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

டெல்கி மேல்சபையில் வெற்றிடமாக இருக்கும் 12 இடங்களுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுமுன்தினத்துடன் முடிந்தது. இந்த தேர்தலில் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் எம்.எஸ்.கில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருக்கிறார்.

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று அவர் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

பஞ்சாப் மாநிலத்தில் வாக்காளராக இல்லாத நிலையில் இங்கிருந்து நீங்கள் போட்டியிட முடியுமா என்று கில்லிடம் நிருபர்கள் கேட்டதற்கு- வேட்புமனுவை நான் தாக்கல் செய்துவிட்டேன். மற்றவை பற்றி முடிவு செய்யவேண்டியது தேர்தல் அதிகாரிதான்! என்று அவர் பதிலளித்தார். இது குறித்து கருத்துத் தெரிவித்த தேர்தல் அதிகாரி, மேல்சபை தேர்தலில் எந்தப் பகுதி வாக்காளர்களாக இருந்தாலும் போட்டியிடலாம் என்றார்.

இந்தநிலையில், எம்.எஸ்.கில்லை வேட்பாளராக நிறுத்தியதன் மூலம் தேர்தல் கமிஷனின் பாரபட்சமற்ற தன்மையைக் கெடுத்து விட்டதாக காங்கிரஸ் கட்சிக்கு பாரதீய ஜனதா கண்டனம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் எல்.கே.அத்வானிக்கு எதிராக முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் டி.என்.ஷேசனை ஏற்கனவே காங்கிரஸ் களமிறக்கியது. தற்போது எம்.எஸ்.கில் டெல்கி மேல்சபை வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கிறார். இது தேர்தல் கமிஷனின் அரசியல் நடுநிலை தன்மையை கேள்விக்குரியதாக ஆக்கிவிட்டது என பாரதீய ஜனதா மூத்த தலைவர் அருண் ஜேட்லி தெரிவித்தார்.

# தேர்தல் உத்திகள் குறித்து கருணாநிதி - வைகோ பேச்சு

தி.மு.க தலைவர் கருணாநிதியை ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ நேற்று சந்தித்துப் பேசினார்.

சென்னை - கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதியின் வீட்டுக்குச் சென்ற வைகோ, தேர்தல் உத்திகள் குறித்து விவாதம் செய்தார். அவருடன் பொள்ளாச்சி தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க வேட்பாளர் டொக்ரர் கிருஷ்ணனும் உடனிருந்தார்.

தி.மு.க கூட்டணியின் முக்கிய பிரசார பீரங்கியாக உள்ள வைகோ இன்னும் தனது தீவிர பிரசாரத்தைத் தொடங்காத நிலையில் தேர்தல் பிரசாரம் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் வைகோ பேசுகையில், அரசியல் கலாசாரத்தைக் காற்றில் பறக்கவிட்டு வருகிறார் ஜெயலலிதா. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறித்து மிகவும் தாறுமாறாக விமர்சித்து வருகிறார். இதன்மூலம் அவரது தகுதி தெரியவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவராக சிறப்பாக செயற்பட்டுள்ளார் சோனியா காந்தி. அவர் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டால் - ம.தி.மு.க அந்த முடிவை ஆதரிக்கும்.

ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தில் தனது ஆட்சியின் சாதனைகளை சொல்லி வாக்குக் கேட்கவில்லை. மாறாக வாஜ்பாயை முன்னிறுத்தியே வாக்கு கேட்கிறார். அவரது ஆட்சியில் எந்த சாதனைகளும் இல்லை. வேதனைகள்தான் அதிகம் என்பதையே இது காட்டுகிறது என்றார் அவர்.

# தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பாக இந்தத் தேர்தல் கருதப்படுகின்றது

## நல்லூர் கோட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன்


நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலானது தமிழ் மக்களிடையே ஒரு கருத்துக்கணிப்பாக அமையப் போகின்றது. எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் நிலையான, நிம்மதியான வாழ்விற்கு இட்டுச் செல்வதற்கு, வழி ஏற்படுவதற்கு, விடுதலைப்புலிகளின் ஆசீர் வாதத்துடன் போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என - யாழ்.நல்லூர் கோட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன்- யாழ். கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களிடையே சமகால அரசியல் நிலை தொடர்பாக விளக்குகையில் தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில்-

எமது அமைப்பானது இதுவரை காலமும் இலங்கை நாடாளுமன்ற தேர்தலை எதிர்த்து வந்தது. அவ்வாறு இருந்தும் தமிழ் இனத்தின் தலைவிதியை சர்வதேச சமூகம் மூலம் தீர்ப்பதற்கான ஒரு ஆணையை பெறுவதற்கு, இந்தத் தேர்தலைப் பயன்படுத்துவதற்காக எமது அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

1977 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆணையை பெற்று, நாடாளுமன்றம் சென்ற தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று கூறி நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினார்கள்.

அதன்பின், ஆயுதப் போராட்டம் ஏற்பட்டு இன்று இராணுவ பலத்துடன் நிற்கும் எமது அமைப்பானது தேர்தலை கண்டு ஒதுங்கவில்லை. தேர்தலானது எம்மை சூழ்ந்து கொண்டுள்ளது. இந்தத் தேர்தலை சரியான முறையில் பயன்படுத்தி, சர்வதேச சமூகத்தை விழிப்படையச் செய்ய வேண்டிய கட்டாயம் தமிழ் மக்களுக்கு உள்ளது எனக் கேட்டுக் கொண்டார். (58)



மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் நடாத்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வு - நிலையத்தின் பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன் தலைமையில்இடம்பெற்றபோது கலந்துகொண்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் காணலாம்.

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் உதவ வேண்டும்

## கோப்பாய் பொலிஸ் அதிகாரி வேண்டுகோள்

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் முன்வந்து உதவவேண்டும் என கோப்பாய் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் கேட்டுள்ளார்.

ஊரெழுபிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியாளர்கள் கைதுசெய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, அந்தச் சம்பவம் குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

பல குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொதுமக்களின் உதவி பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இத்தகைய முன்மாதிரியான செயல்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். கடந்த திங்கட்கிழமை ஊரெழுப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு எடுத்துச் சென்ற இருவர் - கைதுசெய்யப்படுவதற்கும், அதே பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்படுவதற்கும் பொதுமக்களின் தகவல் பெரிதும் உதவியது.

அவ்வாறு பொது மக்கள் உதவி புரிவதனூடாக எமது கடமைகளை இலகுவாகச் செய்வதற்கும், பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்போரைத் தண்டிப்பதற்கும் வசதியாக இருக்கும்.

கோப்பாய் பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட மக்கள் எதுவித அச்சமுமின்றி, எம்மிடம் நேரில்வந்தோ, அல்லது தொலைபேசி இலக்கமாகிய 2226955 உடன் தொடர்புகொண்டோ தகவல்களைத்தந்து உதவமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

# யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பரீட்சைகளில் சித்தி எய்தி, சான்றிதழ்களைப் பெறாதவர்களை - அவற்றை வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.உயர்தொழில்நுட்பநிறுவனத்தின் இயக்குநர் கேட்டுள்ளார்.

தேசிய வணிகக்கல்வி டிப்ளோமா பரீட்சையில் சித்தியெய்திய 1997/1998 மற்றும் 1998/1999 காலப்பகுதிகளில் கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்களுக்குரிய சான்றிதழ்களும், 2001 ஆம் ஆண்டுவரை தேசிய கணக்கியல் டிப்ளோமா தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான சான்றிதழ்களும், ஆங்கில டிப்ளோமாச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்திலேயே இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப).



இலங்கையைச் சேர்ந்த தங்கவேல் முதலிகேசவன் அண்மையில் கனேடிய சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார்.

தங்கவேல் முதலிகேசவன் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து வெளியேறியமையையிட்டு, கனடாவில் இயங்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர்கள் தமது பாராட்டை முதலிகேசவனுக்குத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்கும் போது - விளையாட்டுத் துறையிலும் இவர் சிறந்து விளங்கினார். பின்னர் கொழும்பில் சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்துக்கொண்டு, கொழும்பில் பணியாற்றினர்.

கனடிய மக்களுக்காக 'கேசவன் சட்ட அலுவலகம்' என்ற பெயரில் அமைத்து, சேவை ஆற்றிவருகின்றார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய கட்டமைப்புக்கான நிர்வாக உத்தியோகத்தர் தெரிவுகள் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் யாழ்.வலய இணைப்பாளர் கோ.மைதிலி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - இந்த ஆண்டுக்குரிய புதிய நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

### குருபூசைத் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 97 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு, சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் மாணவர்களிடையே போட்டிகளை நடத்தினர்.

பாலர் வகுப்பு முதல் உயர்தரப் பிரிவு வரையுள்ள பாடசாலை மாணவர்கள் 12 பிரிவுகளாக, வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு, அவர்களிடையே போட்டிகள் நடைபெற்றன.

பேச்சுப்போட்டி, மனனப்போட்டி, பண்ணிசைப்போட்டி, அவதானப் போட்டி, பொது அறிவுப்போட்டி, என ஐந்து வகையான போட்டிகள் இடம் 'பெற்றன.

இந்தச் சனசமூக நிலையத்தின் தலைவர் மு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தப்போட்டிகளில் ஆயிரத்து 300 வரையான மாணவர்கள் பங்குபற்றினர். (12)

# திருநெல்வேலிப் பகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மதுபானங்களில் ஒருதொகுதி உரிமையாளரிடம் ஒப்படைப்பு

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்ததாகத் தெரிவித்து, திருநெல்வேலிப்பகுதியில் இருந்து கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மதுபானங்களில் ஒரு தொகுதி, மீண்டும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனைசெய்ததாகத் தெரிவித்து, கோப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திருநெல்வேலிப் பகுதியில் வைத்து இரண்டு மதுபான சாலைகளிலிருந்து - சுமார் 20 லடசம் ரூபா பெறுமதியான மதுபானப் பொருடகள் கைப்பற்றப்பட்டு, யாழ்.நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

அவற்றில் ஒருதொகுதி - மதுபானங்களுக்குச் சொந்தமான உரிமையாளர் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது, அவர் அனுமதிப்பத்திரம் வைத்திருந்தமை நிரூபிக்கப்பட்டது.

எனினும், பொலிஸார் அங்கு சென்று விசாரணை நடத்தியபோது அவரிடம் மதுபான விற்பனைக்கான அரச அனுமதிப்பத்திரம் வைத்திருக்காததாலேயே அவர்கள் - அந்தக் கடையிலிருந்து மதுபானப் பொருட்களை நீதிமன்றிற்கு எடுத்து வந்திருந்தனர்.

இதனையடுத்து, இந்த விசாரணையை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உயிர் கொல்லியான கசிப்பின் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்காக அரச அனுமதிபெற்ற மதுபான விற்பனை உதவுவதால் - அவை மீண்டும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

எனினும், பொலிஸார் அங்கு சென்ற சமயம் அனுமதிப்பத்திரம் வைத்திருக்காமைக்காக 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. இதனையடுத்து, சுமார் 5 இலட்சம்ரூபா பெறுமதியான மதுபானம் உரியவரால் மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எனினும், மற்றுமோர் மதுபானசாலைக்குச் சொந்தமான 15 லட்சம்ரூபா பெறுமதியான மதுபானம் இன்னமும் நீதிமன்றிலேயே உள்ளது. இதற்கான விசாரணை நாளை யாழ்.நீதிமன்றில் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.(ப)

# தனியார் பஸ் சாரதிகள் கைகலப்பில் ஈடுபட்டனர்

தனியார் பஸ் சாரதிகள் இருவர் பயணிகளுடன் பஸ்ஸை நிறுத்திவிட்டு, கைகலப்பில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் - நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இடம்பெற்றது. மானிப்பாய் - யாழ்ப்பாணம் வீதியில் பயணிகளுடன் தனியார் பஸ்கள் இரண்டும் கலைபட்டு, வேகமாக பஸ்ஸைச் செலுத்தியதன் காரணமாகவே இரண்டு சாரதிகளுக்குமிடையே இந்த கைகலப்பு ஏற்பட்டது.

இதனால், ஓட்டுமடம் வீதியூடான மக்களின் பிரயாணம் சுமார் 10 நிமிடங்கள் தடைப்பட்டன. இரண்டு தனியார் பஸ்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் எனப் பலர் அடங்குவர்.

# அண்மைக் காலமாக குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி மேலும் அதிகரிப்பு

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த உற்பத்தியில் பெரும்பான்மையாகப் பெண்கள் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தி செய்வதிலும், உற்பத்தி செய்த கசிப்பை விற்பனை செய்யும் முகவர்களாகவும் செயற்படுவது பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சில நபர்களே தொடர்ந்தும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் இனங்காணப்பட்டு, தண்டிக்கப்படுகின்றபோதிலும், தமது இருப்பிடங்களை மாற்றி மீண்டும் கசிப்பு உற்பத்தி தொழில் ஈடுபடுகின்றனர். எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : க.மேனுஷிகா
முகவரி : 71.A டேவிற் றோட், குருநகர்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------

முகவரி:---------------

பிறந்த ஆண்டு:---------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------
பெற்றோர்




# தொழில் மலர்

## வாடிக்கையாளர்களுடன் பழகும் தன்மைதான் வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கு பயன்படுகின்றது

காங்கேசன்துறை வீதியில் சிவன் கோயிலுக்கு அருகாமையில் மருதா றபர் முத்திரைசெய்யும் தொழில் நிலையம் ஒன்றினை அமைத்து இயக்கி வருகின்றார். வ.பாலசிங்கம் (T.V.பாலா)தொழில் செய்யும் இடத்திலேயே அவரின் தொழில் சம்பந்தமாக அறிந்துகொள்ளச் சென்றோம். வேலைப்பழு இருந்த நேரத்திலும் எங்களை வரவேற்று உரையாடினார்.

உலகிலே அழகு நாடான சிங்கப்பூரில் பிறந்தேன்.



இப்பொழுது உடுவில் தெற்கு, மானிப்பாய் எனும் இடத்தில் வசித்து வருகின்றேன். எனது ஆரம்ப வேலையாக கொழும்பு குகதாசன் ஸ்ரூடியோவில் **Block making** இனைப் பழகினேன். **Block making** இற்கு நிழல்படம் எடுத்தல் அவசியம் என்பதால் அதையும் தொழிலாக செய்துவந்தேன். எனக்கு கலையில் ஒரு நாட்டம் இருந்து வந்ததால் இந்தத் தொழிலினைப் பழகவேண்டும் என்று என் மனதில் ஒரு ஆர்வம் ஏற்பட்டது. அதை இப்பொழுது ஈடுசெய்திருக்கின்றேன்.

1976 ஆம் ஆண்டு தொழிலினை மேற்கொண்டேன். அப்பொழுது எனக்கு சம்பளமாக 375 கிடைத்தது. அன்றைய நாளில் இந்தச் சம்பளத்தின் பெறுமதி கூடவாக இருந்தது. கொழும்பு செல்வதற்கான காரணமாக அன்றைய காலத்தில் தொழில் நுட்ப வசதிகள் இங்கே இருந்தபடியால் கொழும்பு சென்று இங்கு இவ்வாறு **Block making** தொழில்நுட்ப வேலைகளைப் பழகிவந்தேன்.

தற்போது கணினி தொழில்நுட்பம் கூடியளவு பாவனைக்கு வந்ததால் கணினி முறையிலான வடிவமைப்புக்களை மக்கள் விரும்புகின்றனர். அதற்கான வரவேற்புக் கூடியது. இதன் காரணமாக கணினி தொழில்நுட்ப முறைகளையும் கையாள வேண்டியதேவை ஏற்பட்டது.

கணினி முறையிலான தொழில்நுட்பத்துடன் கூடிய பொலிமர் முறை இங்கே நடைமுறையில் உள்ளதால், றபர் முத்திரை செய்விப்போர் சற்றுக் குறைவாகவேயுள்ளனர். ஆகவே, கணினி முறையான தொழில் நுட்பத்தினையும் மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பொலிமர் வேலைக்குரிய இயந்திரம் ஒன்றினை குணபாலனிடம் இருந்து வாங்கி இயக்கி வருகின்றேன். இதற்கு கணினி பற்றி அறிவு தேவையாகவுள்ளதால், கணினி பற்றிய அறிவும் பெற்றேன். எனது வீட்டிலே மருதா கணினித் தொழிலகம் என்ற பெயரில் கணினி வேலைகளைச் செய்துவருகின்றேன். இதனால், மிக இலகுவாக நல்ல வடிவமைப்புக்கள் கொண்டதாக றபர் முத்திரைகளை செய்ய முடிகின்றது. பல வருடங்களாக இதே தொழிலினை மேற்கொண்டு வருவதால் எனக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு உறவு ஏற்பட்டுள்ளது. இதனால் என்னை நம்பி நிறைய வாடிக்கையாளர் தூர இடங்களில் இருந்தும் வருகின்றனர். இதனால், எனக்கு இந்தத் தொழிலில் ஒரு விருப்பம் ஏற்பட்டுள்ளது. றபர் முத்திரை செய்பவர்களில் T.V.பாலா தனி இடத்தில் இருப்பதாக அறியக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, சோதிடத்திலும் ஆர்வம் உண்டு. 35 வருடமாக இது பற்றிப் படித்தும், தொழில்செய்தும் வருகின்றேன். சோதிடர்களுக்கு சாதகக்குறிப்பு எழுதிக்கொடுப்பேன். அதற்கேற்ப கணிப்பிட்டு ஒரு பிழையுமில்லாமல் சாதகக் குறிப்புக்கள் எழுதிக்கொடுப்பேன். இதனால், வெளிநாடுகளில் இருந்தும் கூடுதலாக சாதகக் குறிப்பு எழுதுவதற்கு என்னிடம் அனுப்புகின்றார்கள். இரவில் தான் இப்படியான வேலைகளைச் செய்வேன். என்ன செய்வது ஒரு தொழிலில் உள்ள ஆர்வத்தினால் அதனை செய்யமுற்படும்போது, நான்செய்யும் அந்தத் தொழிலானது சிறந்ததாக அமைவதால் நிறைய வாடிக்கையாளர் வருகின்றார்கள். இதனால், வேலைப்பழு கூடுகின்றது. ஒரு வேலையில் இருந்தால் அதற்கான வருமானம் இன்றைய கால ஓட்டத்தில் போதுமாக இருப்பதில்லை. அதனால், நான் இன்னொரு வேலையினை தெரிவுசெய்யவேண்டிய தேவை ஏற்பட்டது.

1987 ஆம் ஆண்டில் புத்தகக்கடையும், சோதிட நிலையமும் இணுவிலில் ஆரம்பித்தேன். அந்தக் காலத்தில் புத்தகக் கடையில் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான சிறந்த புத்தகங்களை கூடுதலாக வைத்து விற்பேன். இந்தக் காலப் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும் நூல்களுக்காக வருவார்கள். நூல்கள் கூடுதலான விலைகளில் உள்ளதால் அதனை வாங்க வரும் வசதி இல்லாத மாணவர்கள் என்னிடம் வந்து புத்தகத்தின் விலையினைக் கேட்டுவிட்டு வாங்காமல் திரும்பிவிடும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கான புத்தகத்தினை கொடுத்து, படிப்புக்குத் தேவையான பகுதியினை எழுதிவிட்டுகொண்டுவந்து தரும்படி கூறிவிடுவேன். புத்தகக் கடையில் இலாபம் எடுக்க எனக்கு விருப்பமில்லை. இதனால், எத்தனையோ மாணவர்களுக்கு உதவினேன். அந்தக் காலப்பதிவுகள் என்னால் மறக்கமுடியாதது.

இடம்பெயர்ந்து வன்னியில் இருந்த காலப்பகுதியில் புதுக்குடியிருப்பில் உள்ள நிமலன் ஸ்ரூடியோவில் வேலைசெய்யும் அனுபவம் கிடைத்தது.

தனியாக தொழில் ஆரம்பித்ததன் காரணம் எவருடைய அழுத்தமுமின்றி சுதந்திரமாக தொழிலினை மேற்கொள்ள முடியும் என்பதனாலாகும். இளமைப் பருவத்தில் தொழிலின் அருமை தெரியாமல் இருக்கும் - திருமணமான பின்தான் உழைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

எனது பிள்ளைகளை இந்தத் தொழிலில் ஈடுபடுத்த எனக்கு வருபபமில்லை ஏனெனில், கஷ்டமான தொழிலாக இது அமைவதால் ஆகும். மூளைக்குப் பாரமாக இருப்பதாலும்ஆகும். எனக்கு 5 பிள்ளைகள் ஒருவர் தாணாக முன்வந்து வேலை செயகின்றார். நானும் விட்டுவிட்டேன் அவருக்கு அதில் ஆர்வம் இருந்ததால் தான் செய்கின்றார். ஆர்வம் உள்ளவர்களை ஒரு நாளும் தடுக்கக்கூடாது. ஏனெனில், அவர்களால் தான் சிறந்த முறையில் தொழிலினை மேற்கொள்ளமுடியும்.

கைத்தொழில் - இளைஞர்களுக்கு ஆர்வம் குறைவாகத் தான் இருக்கின்றது. இவர்கள் உழைப்பை முழுமையாக எதிர்பார்த்தல், கஷ்ரப்பட்டு வேலைசெய்ய விருப்பமில்லை போன்ற காரணங்களுக்காக இன்றைய இளைஞர்கள் வீணடிக்கப்படுகின்றார்கள். சொகுசு வாழ்க்கை இவர்களை பிடித்துக் கொண்டிருக்கின்றது.



வ.பாலசிங்கம்

அதில் இருந்து விடுபடவேண்டும். அப்பொழுதுதான் தங்களுக்கு ஒரு தொழில் தேவையென நினைப்பார்கள். வெளிநாட்டு பணப்புழக்கம்தான் இதற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. ஒரு வகையில் இதுவும் ஒரு காரணமாக அமைந்துவிடுகின்றது.

ஆதாரம் இல்லாத அதிகார சபைகள், பாடசாலைகள் போன்றவற்றுக்கான றப்பர் முத்திரை ஒரு போதும் செய்து கொடுப்பதில்லை. இது பெரிய விளைவினைக்கொண்டு வந்துவிடும். பணத்திற்காகவும் நிறையப் பேர் தொழில் புரிகின்றார்கள். எனக்கு வருத்தமாகத் தான் இருக்கின்றது. பணத்தினைவிட நேர்மைதான் முக்கியம். வாடிக்கையாளர்களுடன் பழகும் தன்மைதான் வியாபாரத்திற்கு தூண்டுகோலாக அமைகின்றது என்று செல்லி முடித்தார்.

**நேர்காணல்:**
**செல்வா, லெஸ்லி**

# வாரம் ஒரு சிறு கைத்தொழில் - தேன்

பெரிய அளவில் அடைத்து வைக்கப்பட்டு அதிக விலையில் விற்பனையாகும் பல பண்டங்களை சாமானிய மக்களால் வாங்கி உபயோகிக்க முடிவதில்லை.

தவிரவும் ஒரு குறைந்தபட்ச தேவையை சமாளிப்பதற்காக வசதி படைத்தவர்களும் பெரிய அளவில் அடைத்து வைக்கப்பட்ட பண்டங்கள் வாங்க மிகவும் யோசிப்பார்கள்.

சான்றாக தேனை எடுத்துக்கொள்வோம். தேன் சாதாரணமாக ஒரு போத்தல் ஏறத்தாழ 250 ரூபாவுக்கு கிடைக்கிறது.

தேனை சிறிய சிறிய அளவுக்கு தான் குறைந்த பட்சமாக போத்தல்களில் அடைத்து விற்கி றார்கள்.

வீட்டில் குழந்தைகளுக்கு அல்லது பெரியவர்களுக்கு உடல்நலம் சரியில்லை. மருத்துவர் ஒரு மருந்தைக் கொடுத்து இரண்டு, மூன்றுதுளி தேனில் கலந்துசாப்பிடச் சொல்கிறார். மருந்து மூன்று அல்லது ஆறு வேளைகளுக்கு மேல் சாப்பிட வேண்டியிருக்காது. ஒரு 10, 15 துளி தேனுக்காக அதிக தேன் வாங்குவது அவசியம்தானா? தேன் கெட்டுப்போகும் பொருள் அல்ல. அதிகமாக வாங்கி வைத்தால் ஏதாவது ஒரு வகையில் பயன்படத்தான் செய்யும். ஆனால், அதற்காக ஒரு தொகையை முடக்கவேண்டும். தவிரவும் இந்த மாதிரி சிறு சிறு தேவைகள் உள்ள பண்டங்கள் பல இருக்கலாம். எல்லாவற்றையும் பெரிய அளவில் வாங்கிவைப்பது என்று தீர்மானித்தால் அதுவே ஒரு கணிசமான பெரிய தொகைச் செலவாகிவிடுமே!

இந்த மாதிரி ஒரு சங்கட நிலையை சமாளிக்க இதனை நாம் ஒரு தொழிலாகச் செய்யலாம். தேனை மொத்தமாக ஒரு பெரிய அளவுக்கு வாங்கி சிறு சிறு போத்தல்களில் அடைத்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யலாம்.

சாதாரணமாக ஒரு தேன் போத்தல் 250 ரூபா விலைக்கு கிடைக்குமாயின் குறைந்தபட்ச தேவையை சரிக்கட்டி சமாளிக்க மக்கள் பெருவாரியாக அதனை வாங்குவார்கள்.

ஒவ்வொரு பெரிய நகரத்திலும் அமைந்துள்ள அரசாங்க வனத்துறை அலுவலகங்களில் தேன் மொத்த விலைக்கு தேவையான அளவு கிடைக்கும்.

கைத்தொழில் விற்பனை நிலையங்களிலும் நமக்குத் தேவையான அளவு தேன் கிடைக்கும். தேனை மொத்தமாக வாங்கி நமக்கென ஒரு குறைந்த பட்ச இலாபம் வைத்துக் கொண்டு சிறிய சிறிய அளவுள்ள போத்தல்களில் அடைத்து அதற்கேற்ற விலைகள் வைத்து மொத்த விற்பனையாளர்களிடம் விற்பனை செய்துவிடலாம். அவர்கள் சில்லறை விற்பனை கடைக்கு அவற்றை அனுப்பிவிடுவார்கள்.

தேனை போத்தல்களில் அடைத்து பிறகு போத்தல் கள் மீது அளவான லேபல்கள் ஒட்டினால் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும். இந்த லேபிள்களை நமது நிறுவனத்தின் பெயரில் சொந்தமாக அச்சிடலாம்.

அச்சிடப்பட்டு தயார் நிலையில் வைத்திருக்கும் பலவிதமான லேபிள்களை பலர் விற்பனை செய்கின்றார்கள். அவற்றில் தேவையான அளவு வாங்கி நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முதலில் குறைந்த அளவில் இந்த தொழிலைத் தொடங்கலாம். நாளடைவில் இதையே விரிவாகச் செய்யலாம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | இறுதித் திகதி |
|---|---|---|---|
| றோயல் கல்வி நிலையம் 191, ஹவலக் ரீட், கொழும்பு - 05 தொ.இல : 2508173 2592474 2592748 | உதவி அதிபர் | கல்வி தொடர்பான நிர்வாகத்தில் புலமை லண்டன் க.பொ.த வகுப்புக்களுக்கு கற்பிக்கும் கற்றல் | 23.03.2004 |
| | ஆரம்ப பாடசாலை தலைமை ஆசிரியர் | பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் | 23.03.2004 |
| | சரித்திரபாட ஆசிரியர் | சரித்திரப் பட்டப் படிப்பு, லண்டன் க.பொ.த வகுப்புகளுக்கு சரித்திரம் கற்பித்த அனுபவம். | 23.03.2004 |
| | மேற்கத்திய இசை ஆசிரியர் | பெண், சங்கீதப் பாட்டு ஆகியவற்றில் ஆரம்ப நிலையில் இசையில் பயிற்றப் பட்டிருத்தல் | 23.03.2004 |
| | ஆங்கில ஆசிரியர் | ஆங்கில மொழி பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் | 23.03.2004 |

**தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# கோழிப்பண்ணைகளின் பொருளாதாரம்

முட்டைகளைப் பெறுவதற்கும், இறைச்சிக்கும் கோழிகளை வளர்க்கும், நடவடிக்கைகளையே கோழிப்பண்ணைத் தொழில் உள்ளடக்கியிருக்கிறது. இந்தத் துறையில் தொழில் முயற்சிகளின் அளவு கணிசமான அளவில் வேறுபட்டிருக்கிறது. இந்தக் கைத்தொழிலின் பொருளாதார சாத்தியப்பாடு வரையறுக்கப்பட்டதாக இருந்தபோதிலும் வருமானம் மற்றும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் மக்களின் போஷாக்குத் தரமுன்னேற்றம் போன்ற அம்சங்களைப் பொறுத்த வரையில் இந்தத்



துறை, மெய்ப்பங்களிப்பு மிக உயர்ந்ததாகும். இந்தத்துறை, மேலும் கூடிய பங்களிப்பினை நல்கக்கூடிய வாய்ப்பும் உண்டு. எனினும் கோழிப்பண்ணைக் கைத்தொழில் அதன் பங்குக்கு சில பிரச்சினைகளை கொண்டிருக்கிறது. அடிக்கடி மாற்றமடையும் இலாப எல்லைகள் இவற்றில் மிக முக்கியமான பிரச்சினையாகும். உள்ளீடுகளின் சாதகமற்ற விலை அசைவுகளின் விளைவாகவும், குறிப்பாக கோழிப்பண்ணை உற்பத்திகளின் விலை மாற்றங்களினாலும் இந்த நிலைமை தோன்றுகின்றது. இந்த ஆண்டில் முட்டை, இறைச்சி விலைகள் முன்னைய வருடங்களையும்விட கூடிய அதிகரிப்புக்களைக் காட்டின.

கோழி இறைச்சியையும், முட்டையையும் உற்பத்தி செய்யும் நான்கு வகையான கோழிப் பண்ணை அமைப்புக்களை இனங்கண்டுள்ளது. அவையாவன.

1) பெரிய அளவிலான பண்ணைகள் - இவை 10,000 க்கும் அதிகமான பறவைகளைக் கொண்டவை.
2) நடுத்தர அளவிலான பண்ணைகள் - பறவைகள் தொகை 1000 இலிருந்து 10000 வரை.
3) இது பண்ணைகள் - 1000 க்கும் குறைவான பறவைகள்.
4) வீட்டுப் பின்புறங்களில் எவ்வித ஊக்குவிப்புமின்றி சிறு பண்ணைகளை வைததிருப்போர்.

இந்த வகைப்படுத்தல் விரிவானதோ அல்லது விஞ்ஞான பூர்வமானதோ அல்ல. உதாரணமாக அரச பண்ணைகள் இந்தப்பட்டியலிருந்து மொத்தமாக நீக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்வப்போது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களையும், பீடைகள் மற்றும் ஆபத்துக்களையும் இந்த ஒவ்வொரு பண்ணையமைப்பையும் அனுசரித்து செல்லும் விதத்தில் காணப்படும் வித்தியாசங்களைக் கண்டறிய இந்தப் பகுப்பு முறை உதவுகிறது. அனுசரித்து செல்லும் ஆற்றலில் காணப்படும் வேறுபாடுகளை ஒருபுறம் உற்பத்தி மட்டத்தின் அளவுகளிலும மறுபுறம் வெவ்வேறு பண்ணையமைப்புக்களைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் பெற்றிருக்கும், முகாமை தொழில்நுட்ப சந்தைப்படுத்தல் ஆற்றல்களின் பின்னணியிலும் விளக்கமுடியும்.

உதாரணமாக.

மந்தத்தின் போது நொடித்துப்போன கோழிப் பண்ணையாளர்களில் பெரும்பான்மையினர் சிறு அளவு உற்பத்தியாளர்களாவர். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் அத்தகைய அபாய ஏதுக்களின் தாக்கத்தினை பெரிய அளவு உற்பத்தியாளர்களைவிட சிறு பண்ணைச் சொந்தக்காரர்களே பெரிதும் உணர்கின்றனர்.

இது 1000 க்கும் குறைந்த பறவைகளைக் கொண்ட பண்ணைகள், பொருளாதார ரீதியில் சாத்தியமற்றவை என்பதை வலியுறுத்திக் கூற வில்லை. சந்தை மற்றும் விலை மாற்றங்களினால் அவை இலகுவில் வேறுபடத்தக்க நிலையில் இருக்கின்றன. என்பதனை மட்டுமே இது புள்ளிவிபர அடிப்படையில் காட்டுகிறது. அதேபோல செழிப்பான காலங்களில் இந்தச் சிறு பண்ணைகள் காளான்கள்போல் பெருகி உயாந்த விலைகளின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்கின்றன. இது சில வேளைகளில் மிகை உற்பத்திக்கு வழிவகுக்கின்றது.

விலை மந்தம் நிலவும் காலத்தில் இத்தகைய பண்ணைகளில் பெரும்பாலானவை முடங்கிவிடுகின்றன. விலை வீழ்ச்சிகளை அவற்றால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. மாறாக பெரிய நடுத்தர அளவிலான பண்ணைகள் உள்ளீடு, வெளியீடு என்பவற்றின் விலைகளில் ஓரளவுக்கு கட்டுப்பாட்டை வைத்திருக்கின்றன. விலை மந்தங்களினால் தோன்றும் அபாய ஏதுக்களை சமாளிக்கும் சூழ்நிலை அப் பண்ணைகளுக்கு வழங்குகின்றது.

விலங்குப் புரதத்தின் மூலம் ஒன்று என்ற வகையில் முட்டை சில உள்ளார்ந்த குணாம்சங்களைக் கொண்டது. இத்தகைய குணாம்சங்களே கேள்வியின் மாதிரி விலைமட்டம் விலை மட்டத்தின் அப்போதைய வித்தியாசங்கள் போன்ற காரணிகளை நிர்ணயிக்கின்றன. சார்பு ரீதியாக உயர் புரதச்சத்து உள்ளடக்கம், நீண்ட ஆயுள், மலிவான விலங்குப் புரத மூலமொன்று என்ற வகையில் முட்டையின் உணவுப் பெறுமதி என்பன இநதக் குணாம்சங்களில் உள்ளடங்குகின்றன. எனவே பல்வேறு நுகர்வு மட்டங்கள், நுகர்வு நோக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் முட்டை வெவ்வேறு விதங்களில் பாவனைக்கு எடுக்கப்படுகிறது. பிரதம உணவுப் பொருளாகவும், இடைநிலை உணவாகவும், சந்தையில் இறுதிப் பொருளாகவும் அது பயன்படுகின்றது. மீன், கருவாடு மற்றும் இறைச்சி போன்ற அதன் பிரதியீட்டுப் பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடும்போது முட்டை விலைகள் சார்பு ரீதியாக நிலையாக இருப்பது தெரிகிறது.

முட்டை விலை மாற்றங்கள் கேள்வி, வழங்கள் என்பனவற்றின் செல்வாக்குக்குட்பட்டே இடம்பெறுகின்றன. கேள்வியை நிர்ணயிக்கும் முக்கிய காரணி பண்டிகைக் காலம் போன்ற பருவங்களைப் பொறுத்த ஒரே விடயமாகும். பண்டிகைக் காலங்களின்போது, முட்டைக்கான கேள்வி உயர்ந்து சென்று விலையதிகரிப்புக்கு வழிகோலுகிறது. இந்த விலையதிகரிப்புக்களை உடனிருந்து கணிசமான விலை வீழ்ச்சிகள் ஏற்பட்டு, முட்டை உற்பத்தியாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். குறிபபாக, சிங்கள - தமிழ் புத்தாண்டு பருவத்தின்போது- முட்டை, கோழி இறைச்சி போன்றவற்றுக்கான கேள்வி தீவிரமாக உயா்ந்த விலை மட்டங்களில் அதிகரிப்புக்களை ஏற்படுத்துகிறது. பண்டிகைக்காலங்களில் காணப்படும் இந்த நுகர்வு மாதிரியின் மாற்றம் தவிர கடந்த சில வருடங்களில் முட்டைக்கான கேள்வி அதிகரித்துவரும் ஒருபோக்கினையும் காட்டியுள்ளது. இந்த அதிகரிப்புக்கு இரண்டு காரணங்களுண்டு. ஒரு புறத்தில் முட்டை சாப்பிடுவோர்தொகை அதிகரித்து வருவதும் மறுபுறத்தில் தமக்குரிய முட்டை நுகர்வு அதிகரிப்பதுமாகும். இதன் விளைவாக கடந்த சில வருடங்களில் முட்டைகளின் மொத்தநுகர்வும், தனிநபர் முட்டை நுகர்வும் அதிகரித்துள்ளது.

சனத்தொகை அதிகரிப்பு, மக்களின் உயர்ந்துவரும் வாழ்க்கைத்தரம் - உணவுப் பொருட்கள் மற்றும் போஷாக்கு குறித்த மாறிவரும் மனப்போக்குகள், ஏனைய விலங்குப்புரதச்சத்து மூலகங்களின் விலை வேறுபாடுகள், (உணவு வழங்கல் சுற்றுலாக் கைத்தொழில் போன்றன) கைத்தொழில் பாவனைக்கான முட்டையின் கேள்வியில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல்வேறு காரணிகளுடன் இந்த மாற்றங்கள் தொடர்ந்திருக்கின்றன. மேலே குறிப்பிட்ட காரணிகளின் போசாக்கு மாதிரி அடுத்துவரும் வருடங்களில் முட்டைக்கு பெருமளவில் கேள்வி நிலவும் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது. எனினும், கேள்வி அதிகரிப்பின் பரிமாணம் பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கின்றது.

ஏனைய விலங்குப் புரதங்களின் (பிரதியீடுகளின்) உற்பத்திப்போக்கு, வளங்கள்



பற்றாக்குறைகளைக் காட்டி வந்திருக்கி றது. இதன் காரணமாக, இந்தப் புரதப் பொருட்களின் விலைகள் உயர்ந்து செல்கின்றன. இது மறுபுறத்தில் முட்டைகளுக்கான மேலதிக கேள்வியை தூண்டிவிடுகின்றது.

முட்டை விலைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் வளங்கள் நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன. உற்பத்திச் செலவு, சந்தைப்படுத்தல் செலவு ஆகிய இரு கூறுகளையும் இங்கு குறிப்பிட முடியும். சந்தைப்படுத்தலானது தரப்படுததுதல், இருப்பில் வைத்திருத்தல், விநியோகம் செய்தல், என்பவற்றை உள்ளடக்கியதாகும். முட்டை, கோழி இறைச்சி என்பனவற்றின் உற்பத்திச் செலவுகளில் காணப்படும் வேறுபாடுகள், கோழித்தீன், கூலி, மருந்துப் பொருட்கள் போன்ற நேரடி உள்ளீடுகளின் செலவுப் போக்கினையே பிரதிபலிக்கின்றன. இவற்றில், முட்டைகளின் உற்பத்திச் செலவில் 80 சதவீதத்திற்கு கோழித்தீன் பொறுப்பாக இருக்கிறது. கடந்த 6 வருட காலத்தில் கோழித்தீன் வகைகளின் விலைகள் செங்குத்தாக உயர்ந்து சென்றுள்ளன. எனினும், இத்தகைய பொருட்களின் விலையதிகரிப்பு அனைத்து கோழிப்பண்ணையாளர்களையும் அல்லது உற்பத்தியாளர்களையும் ஒரே விதத்தில் பாதிக்கவில்லை. பண்ணைகளின் செயற்பாடு, பாவிக்கப்படும் தொழில்நுட்டம், குடும்ப உழைப்பு கோழித்தீன் பிரதியீடுகள் கிடைக்கும் தன்மை போன்ற காரணிகளே உற்பத்தி பாதிக்கப்படும் மட்டங்களை நிர்ணயிக்கின்றன. இதன் காரணமாக சில பண்ணைகள் சந்தை சக்திகளால் மிக இலகுவில் ஊறுபடுத்தத்தக்க நிலையில் இருப்பதுடன், மேலும் சில பண்ணைகள் அவ்வப்போது ஏற்படும் விலை மாற்றங்களை ஓரளவு தாக்குப்பிடிக்கக் கூடியனவாக இருக்கின்றன.


பண்ணையின் அளவுக்கும் உற்பத்திச் செலவுக்குமிடையில் ஒரு வகையான தொடர்பிருந்து வருவதனை உற்பத்திச் செலவு குறித்த தரவுகள் காட்டுகின்றன. என்றாலும், இதில் முக்கியமான அம்சம், முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கையோ அல்லது பண்ணையின் அளவோ அல்ல, மாறாக பண்ணையின் முகாமைத்திறனே இங்கு முக்கியம் பெறுகிறது. பாவிக்கப்படும் தொழில்நுட்பம் மற்றும் பண்ணைக்குள்ளே கோழித்தீனுக்கான பிரதியீடுகள் கிடைக்கும் அளவு போன்ற விடயங்களைப் பொறுத்தே செலவு அமைகின்றது. கோழித்தீனுக்கு ஆகும். செலவு மட்டுமே, முட்டைகளின் உற்பத்திச் செலவில் 80 சதவீதம் வரையில் இருக்கிறது. என்றே மதிப்பிடப்பட்டுள்ளது.

கொல்லைப் புறங்களில் காணப்படும் அல்லது தூண்டுதல் பெறாத சிறுபண்ணைகளின் விடயத்தில், இப்பண்ணைகளில் உள்ளூர் இனக்கோழிகளே வளர்க்கப்படுகின்றன. தவிடு போன்ற வீட்டில் கிடைக்கும் உணவுப்பொருட்களே இக்கோழிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆக, இந்தக் கொல்லைப் புறப்பண்ணைகளில் உற்பத்திச் செலவு மிகக்குறைவாக இருப்பதனால் உற்பத்தியாளர்களுக்கான இலாப எல்லை மிக உயர்ந்த மட்டத்தில் நிலவுகிறது. எனினும், இப்பண்ணைகளில் முட்டையிடும் கோழிகளின் உற்பத்தி ஆற்றல் குறைவாக இருப்பதனால் வெளியீடு குறைவாக இருக்கிறது. இதன் விளைவாக வருமானங்களை உருவாக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டதாகவே எப்பொழுதும் இருந்து வருகிறது.

இலாப எல்லையின் அளவு, வெளியீட்டு மட்டம் என்பன கோழிப்பண்ணைத் தொழிலில் இலாபத்தன்மையை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளாகும். வெளியீட்டு மட்டத்தைப் பொறுத்த வரையில், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் குறைந்த ஆயுள் எல்லை இயற்கையாகவே வெளியீட்டு மட்டத்தை அதிகரிக்கிறது. இரண்டாவதாக, கோழித்தீனுக்கு பிரதியீடுகள் கிடைக்கும் மட்டமும் இதில் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்த நிலைமைகள் சந்தை மாற்றங்களை சமாளிக்கும் ஆற்றலை இக் கைத்தொழிலுக்கு வழங்குகின்றன.

கோழிப்பண்ணை உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியும் விலை மட்டங்களும் சார்பு ரீதியாக நிலையாக இருப்பதனால் உற்பத்தியாளர் இலாப எல்லையை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக தீனியே இருந்து வந்துள்ளது. பொதுவாக கோழிப் பண்ணைகளின் இலாப எல்லைகளும், வியாபாரத்தின் அளவும் எப்போதும் உயர் மட்டத்திலேயே இருந்து வந்திருக்கிறது. என்றாலும், கோழிப் பண்ணைகளின் இலாப மட்டம் பண்ணைகளின் அளவைப் பொறுத்து வேறுபடுகிறது.

உற்பத்தி மட்டம், உள்ளீடுகளுக்கான பிரதியீடுகள் கிடைக்கும் அளவு, பயன் படுத்தப்பட்ட தொழில்நுட்பம் போன்ற காரணிகளில் இது தங்கியிருப்பதுடன் பல சந்தர்ப்பங்களில் இந்நிலைமை பெரிய பண்ணைகளுக்கு சாதகமாகவே இருந்துவருகிறது.



## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 15/= | 20/= | 20/= | 30/= | 12/= | 18/= | 10/= |
| வெண்டிக்காய் | 10/= | 10/= | 15/= | 08/= | 20/= | 10/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 40/= | 45/= | 50/= | 45/= | 50/= | 40/= | 40/ |
| கத்தரிக்காய் | 25/= | 10/= | 15/= | 15/= | 15/= | 20/= | 10/= |
| பாகற்காய் | 20/= | 20/= | 25/= | 20/= | 20/= | 20/= | 30/= |
| கரட் | 20/= | 30/= | 35/= | 20/= | 30/= | 25/= | 30/= |
| பீற்றூட் | 15/= | 08/= | 10/= | 15/= | 12/= | 20/= | [illegible] |
| முருங்கக்காய் | 120/= | 100/= | 120/= | 140/= | 30= | 100/= | 120/= |
| வெங்காயம் | 20/= | 20/= | 25/= | 15/= | 25= | 20/= | 30/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 30/= | 30/= | 30/= | 25/= | 30/= |

பொதுத் தேர்தல் 2004

உணரவேண்டிய உண்மைகள்

- சிலம்பு -

# சங்கரியாரின் உரைகளில் இருந்தே அவரை இனங்கண்டு கொள்ளுங்கள்...



(நேற்றைய தொடர்ச்சி....)

**1970** ஆம் ஆண்டு சிறிமாவோ ஆட்சி பீடமேறியதும், நாடாளுமன்றம் அரசியலமைப்புச் சபையாக மாறி புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கியது. இருந்த சில சலுகைகளையும் பறித்து பௌத்த சிங்கள அரசியலமைப்பை உண்டாக்கினார் சிறிமாவோ.

இந்தக் காலகட்டத்திலேதான் 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வல்வெட்டித்துறையிலே தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பங்குபற்றாத மூவர் அருளம்பலம், தியாகராசா, ஆனந்தசங்கரி என்பது கவனிக்கப்படவேண்டும். எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், எல்லாக் கட்சிகளும் தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்திய இந்தக் கூட்டத்தில் சங்கரியார் கலந்துகொள்ளவில்லை.

1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வல்வெட்டித்துறையில்கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய நான்கு கட்சிகளின் உறுப்பினர்கள் - ஏகோபித்து தமிழினத்தின் சார்பில் அரசியல் நிர்ணய சபைக்குக் கீழ்க் கண்ட குறைந்தபட்சக் கோரிக்கைகளை விடுபபதென்றும், இவையே இலங்கை வாழ் தமிழினத்தினை குறைக்கமுடியாத கோரிக்கைகள் என்று, பிரகடனப்படுத்துவதென்றும் தீர்மானிக்கின்றனர்.

**கோரிக்கைகள்:**

**1. சிங்களமும், தமிழும் இந்த நாட்டின் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டும். அவற்றின் திட்ட வட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டும்.**

**2. சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் நீதி நிர்வாக மொழிகளாக இருக்கவேண்டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ்விரு மொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும்.**

**3. இலங்கையின் எப்பாகத்திலும் சிங்களவரோ தமிழரோ தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.**

**4. ஒவ்வொரு பிள்ளைகளும் சிங்களமோ, தமிழரோ அவரவர் தாய்மொழியே போதனா மொழியாய் இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் இலவசமாக கல்வி வசதிசெய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.**

**5. உயர்தரக் கல்வி நிலையங்களில் சேருவதற்கோ, அரசாங்க சேவையில் சேருவதற்கோ, தன் தாய்மொழியில் பரீட்சை எடுத்து தன் தகுதிக்கேற்ப சேரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.**

**6. அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ, நிர்வாக ஒழுங்கினங்களைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியல் சாசனத்தில் அமையவேண்டும். நீதிநிர்வாகத்தில் எவ்வித அரசியல்தலையீடும் இருத்தல் ஆகாது.**

**7. இந்த நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும், சமயம் பற்றியும், இந்தியல் அரசியலமைப்புத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்படுத்தப்படவேண்டும்.**

**8. இலங்கைக் குடியரசு சமய சார்பற்ற அரசாக இருத்தல்வேண்டும். ஆனால் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டும்.**

**9. (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின் -**

**(ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின், அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்கு தகுதியுடையவராயின் -**

**(இ) 15.11.48 இற்கு முன் இருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவராயும், இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விரும்புவராயும் இருப்பின் -**

**அவர்கள் எல்லோரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டும். வம்சாவளிப் பிரஜைக்கும், பதிவுப் பிரஜைக்கும் எந்தவிதமான பாகுபாடும் இருத்தல் ஆகாது. எந்தக் காரணம் கொண்டும் அவருடைய பிரஜா உரிமையும் பறிக்கப்படலாகாது.**

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கைகள் அத்தனையையும், எதிர்த்தவர் சங்கரியார். தந்தை செல்வாவும், மற்றவர்களும் இந்தக் கோரிக்கைகளை அரசியலமைப்புச் சபையில் முன்மொழிந்தபொழுது- தந்தை செல்வாவையும், அவரது கொள்கைகளையும் மிகவும் கேவலமாகப் பேசியவர் சங்கரியார்.

அவரது உரைகளிலிருந்து சில பகுதிகள் - அதிகார அறிக்கை அரசிலயமைப்புச் சபை 26 ஆம் திகதி ஜுன் 1971 ஆம் ஆண்டு (பக் 2287)

இன்று எங்கள் முன் இருக்கும் தீர்மானம் அதற்குரிய திருத்தப் பிரேரணைகள் எமது இனத்தைப் பாதிக்கும் என்று கூறும் சங்கரியார் தொடர்ந்து பேசியபோது -

என்னத்தைத் கொடுக்கின்றார்களோ, என்னத்தைத் தலைவர்கள் கொடுக்கமுடியுமோ அதைத்தான் எடுக்க முன்வரவேண்டுமேதவிர, இங்கே வந்து தேவையில்லாமல் சிங்களவர்களைத் தமிழர் ஆண்டார்கள், தமிழர்களைச் சிங்களவர்கள் ஆண்டார்கள், அங்கே நாங்கள் வீரம் பேசினோம், இங்கே இவர்களை இப்படி விரட்டி அடித்தோம் என்று பழம்பெருமை பேசுவதால் பயனில்லை'

இத்துடன், நிற்கவில்லை. சங்கரியார் தந்தை செல்வாவைப் பார்த்துக் கூறுகின்றார் 1956 ஆம் ஆண்டு மொழிப் பிரச்சினை என்று ஒரு பிரச்சினைகளை இந்த நாட்டில் இல்லாத காலத்திலே மொழிப்பிரச்சினையை பெரியதொரு பிரச்சினையாக்கி, கௌரவ பண்டாரநாயக்க தமிழர்களுக்கு பெரும் துரோகம் செய்கின்றார் என்று அன்று கூறினார்கள். அரசியல் அமைப்பு அதிகார அறிக்கை (பக் 2288)

தந்தை செல்வாவின் போராட்டங்கள் வரலாற்றில் பதியப்பட்டவைகளாகும். தந்தையின் தியாகம் அளப்பரியது. அனைத்து அரசியல் வாதிகளாலும் நேர்மையின் சின்னமாகப் புகழப்பட்டவர் தந்தை செல்வா. அவரது போராட்டத்தைப் பற்றிச் சங்கரியாரின் கருத்துக்கள் இவை.

இவர்கள் நடத்திய போராட்டங்கள், இவர்களுடைய வீரங்கள் ஒரு சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகிறேன். நண்பர் தர்மலிங்கம் சொன்னார் - வீட்டிலே இருந்து அதைக் கேளும் என்று. வீட்டிலிருந்து கேட்கிற நாயாக நாங்கள் இங்கே வரவில்லை. வீட்டில் இருந்து தான் குரைத்தார்கள். கடந்த பதினைந்து ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலே இருந்துதான் தமிழர்களுடைய போராட்டத்தை நடத்தினார்கள். 1956 ஆம் ஆண்டு வரையும் இந்தநாட்டிலே வாழ்ந்த தமிழினம் கௌரவமாக சுயமரியாதையுடன் வாழ்ந்த அந்தப் பெருமையை காலிமுகத்திடலிலே கொண்டுவந்து பறக்க விட்ட வீரர்கள் இவர்கள்.

இது 1956 ஆம் ஆண்டு நடந்தது. 1958 ஆம் ஆண்டு என்ன நடந்தது? சிங்கள சிறி என்று சொல்லி இரண்டு மூன்று எழுத்துககளை அங்கே அழித்த நேரத்திலே, இங்கே பெருவாரியான தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டதை இவர்கள் மறந்து விட்டார்கள். 1961 ஆம் ஆண்டு அங்கே தபாற்கந்தோர் நடத்தினார்கள். இங்கே ஆயிரக்கணக்கானோர் பலியாகினார்கள். (பக் 2289)

இவ்வாறுதான் சங்கரியார் தந்தை செல்வாவின் போராட்டங்களையும், தமிழ் மக்களின் போராட்டங்களையும் கொச்சைப்படுத்தி, இன்றைய ஜனாதிபதியின் தாயாரோடு அரசியல் உறவை வைத்திருந்தார்.

புத்தமதத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை வரவேற்கும் சங்கரியார் - தந்தை செல்வாவை ஒரு கிறீஸ்தவர் என்று ஏளனம் செய்வதைப் பார்க்கவேண்டும் (பக் 2298 சங்கரியின் உரை)

'பௌத்தசமயத்துக்கு இந்த நாட்டிலே முக்கியத்துவம் கொடுத்து விடுவதால், தமிழ் மக்கள் எதையும் இழந்துவிடப்போவதில்லை. இதனை எங்கும் கூறுவேன். செல்வநாயகத்தின் கீழ் சைவசமயம் பாதுகாக்கப்படும் என்றிருந்தால், பௌத்த சமயத்தின் கீழ் இந்நாட்டிலே சைவ சமயமும் பாதுகாக்கப்படும். அதனை இவர்கள் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு கூறுகிறேன்'

**'பௌத்த சமயத்துக்கு இந்த நாட்டிலே முக்கியத்துவம் கொடுத்து வீடுவதால், தமிழ் மக்கள் எதையும் இழந்துவிடப் போவதில்லை. இதனை எங்கும் கூறுவேன். செல்வநாயகத்தின் கீழ் சைவ சமயம் பாதுகாக்கப்படும் என்றிருந்தால், பௌத்த சமயத்தின் கீழ் இந்நாட்டிலே சைவ சமயமும் பாதுகாக்கப்படும். அதனை இவர்கள் பாதுகாக்க வண்டிய அவசியம் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு கூறுகிறேன்'**

(பக் 2299 இல் மேலும்கூறுகையில்)

இந்த நாட்டின் முக்கிய சமயமான பௌத்தம் இருக்கவேண்டும் என்று கூறினால், அதில் நியாயம் இல்லையா? இதனைப் பகிரங்கமாகக் கூறுவதானால் யாரும் குறைகூறப்போவதில்லை. எனவே, தேவையில்லாத பிரச்சினை எங்களுக்கு எதற்கு?

1970 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாயக் கட்சி, புதிய இடதுசாரிக் கட்சிக் கூட்டணி ஆகியவற்றின் வெற்றியின் பொழுது தந்தை செல்வா கூறினார். கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று. இதைப் பற்றித் தந்தை செல்வாவின் தொண்டனாக பறைசாற்றிக் கொள்ளும் சங்கரியார் என்ன கூறுகின்றார். (பக்:2302)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, புதிய இடதுசாரிக் கட்சிகளைக் கொண்ட கூட்டுக்கட்சிகள் வெற்றியடைந்ததும், தலைவர் கூறினார் - கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேணடும் என்று. கடவுள் தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதா? அல்லது கடவுள்தான் இவர்களது சொத்துரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதா? கேள்வி. இவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கத்தான் இங்கு இருக்கின்றார்களா?

தமிழ் மக்களின் உரிமைக்காக சொத்துக்களை இழந்தவர் செல்வா. அவரைப் பார்த்து அவர் தனது சொத்துகளைப் பாதுகாக்கப் பாடுபடுகின்றார் என்று கேலி பேசியவர். இன்று தானும் செல்வத்தை இழந்ததாக எப்படிப் பாடடுப்பாடுகின்றார். தமிழினத்துக்கு இவர் காட்டுவாரா? தான்செய்த தியாகத்தை சொத்து இழப்பை இவர் எவர் எவரையோ அடைவதற்கு யார் யாரையோ தியாகம் செய்தவர் மட்டும்தான் உண்மை.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலே ஒரு பங்களாதேஷ் உருவாகினால், அதைவிடக் கூடுதலான தொகையுள்ள தமிழ் மக்கள் இலங்கையின் மற்றப் பகுதிகளில் வாழ்கிறார்களே. அவர்களைப் பாதுகாக்கும் செலவு யாருக்குரியது என்று கேள்வி எழுப்புகின்றார் சங்கரியார். (பக்: 2315)

இத்துடன், நிற்கிறாரா அவர். தந்தை செல்வாவினால் தமிழ் மக்களின் கோரிக்கை என்று வைக்கப்பட்ட அத்தனையும் நிராகரிக்கப்படுகின்றன. இவை யாவற்றிற்கும் அரசோடு துணை நிற்கின்றார் ஆனந்தசங்கரி. இந்த நிலையில் அரசியல் அமைப்புச்சபையைவிட்டு வெளியேறுவது என்று முடிவாகின்றது. தந்தை செல்வா அது பற்றி இறுதி அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளார் என்ற செய்தி பரவிவிட்டது. சங்கரி தந்தை செல்வாவின் அந்த முடிவைப் பற்றி ஏளனம் செய்து ஆற்றிய உரை (பக்: 2317)

இங்கே ஒரு கதை அடிபடுகிறது. இன்றோடு இந்தச் சபைக்கு 'குட்பை போட்டு விட்டு' தமிழரசுக் கட்சியினர் வெளியேறப்போகிறார்கள் என்று. ஒன்று மட்டும் நான் கூற விரும்புகின்றேன் - நீங்கள் தமிழர்கள், தமிழ் மக்களுக்கென்று ஒரு கௌரவம் இருக்கிறது, அதைப்பற்றி அடிக்கடி பேசுபவர்கள் நீங்கள். போனால் தயவுசெய்து மீண்டும் வராதீர்கள். இங்கு மீண்டும் வரும் உத்தேசம் இருந்தால், தயவுசெய்து போகவேண்டாம் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு தந்தை செல்வாவின் போராட்டத்திற்கு எதிர்ப்புக் கொடுத்தவர் இன்று தந்தையின் படத்தை போட்டு வாக்குக்கேட்பதோடு, வீடு வேண்டும் தமிழ் மக்கள் வாழ என்று தமிழ் மக்களுக்கு தந்தை செல்வா கூறினார். அந்த வீடுதான் நிரந்தரம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாழ நிலம்வேண்டும் என்று வந்துள்ளது. ஒரு ஆமைப்பூட்டுடன் திறப்பும் இல்லாமல் சங்கரியார் வந்துள்ளார். அரசியல் வாழ்க்கை தொடங்கிய காலங்கள் தமிழனத்தின் துரோகங்களுக்கு உதவியவர்- இன்று தந்தையின் படத்தை வைத்துக்கொண்டு நாடகமாடுகின்றார். அன்றைய தமிழரசுக் கட்சியினர் தந்தையை நன்கு அறிவர். தந்தையை ஈழத்துக்காந்தி என்று கேலி பேசிய கிறீஸ்தவர்கள் தமிழர் தலைவரா? இவரின் கீழ் சைவம் பாதுகாக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பிய சங்கரியாரின் ஆட்டம், ஏப்ரல் 2 ஆம் திகதி முடிவுக்குவரும். தமிழ் மக்கள் சங்கரியாரின் வாயில் ஆமைப்பூட்டைப் போட்டு, பூட்டிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. 'தந்தையின் வழியில் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழுமையாக வெற்றிபெறவேண்டும். தந்தையை இழிவுபடுத்தி வசைபாடிய சங்கரியார-

கட்டுப்பணத்தை இழக்கவேண்டும். ஏப்ரல் 2 ஆம திகதி தந்தையின் கனவு நனவாக அவரது தொண்டர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

# மனிதநேயம் குன்றி வருவதையே தற்போது காண்கின்றோம்

## வே.பாலகுமாரன் தெரிவிப்பு

தற்போதைய சூழலில் வாழ்கின்ற பிள்ளைகள் பக்கத்து வீட்டு முகவரி தெரியாமல் வாழ்கின்ற சூழலே காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டார் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வே.பாலகுமாரன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குறுந்திரைப்பட தொகுப்பு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, குறுந்திரைப்படங்கள் பற்றிய மதிப்புரையை ஆற்றும்போதே பாலகுமாரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில் -

தமிழ் மக்கள், சிங்கள மக்களோடு இணைநது செயற்படுவதானது மகிழ்ச்சியைத் தருகின்றது. ஸ்கிறிப்நெட் நிறுவனத்தின் ஊடாகக் காட்டப்பட்ட இந்தத் திரைப்படங்கள் - சிங்கள பேரினவாதத்தின் இயல்பை உலகிற்கு வெளிப்படுத்துவதாக அமைகின்றபோதும், அந்த வெளிப்படுத்துகையில் சிங்கள சமுகத்தின் ஒத்துழைப்பும் காணப்படுவது எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

தமிழர்கள் அரசியல்ரீதியாகவும், ராஜதந்திரரீதியாகவும் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் நிறையவே உண்டு. அவ்வாறான அனுபவங்களைச் சிங்களவர்கள் மத்தியிலே பெற்றுக்கொணடது குறைவாகவே இருக்கின்றது. அவர்கள் கலை இலக்கியங்களில் சினிமாத்துறையில் ஓரளவு அனுபவங்களைப் பெற்றிருக்கின்றார்கள். இருவரும் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

மனிதநேயம் தற்போதைய காலத்தில் குன்றி வருகின்றதையே காண்கின்றோம். அதனை மீட்பதற்கு என்ன வழி என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும. பனையைக் காணாத பிள்ளைகள்கூட நமது தேசத்தில் இருக்கின்றார்கள் என்பது - எவ்வளவுதூரம் சமுதாயம் குறுகிவிட்டது என்பதற்கு நல்ல சாட்சியமாக விளங்குகின்றது. பிறரைப்பற்றிச் சிந்தனை கொள்ளாத சமுதாயமாக தற்போதைய சமுகம் மாறிவருகின்றது.

இன்றைய குறுந்திரைப்பட வெளியீட்டில் சிங்கள சமுதாயத்திற்குப் பெரும் பங்குண்டு. குறுந்திரைப்படங்கள் குறுகிய நேரத்தில் பல செய்திகளைக் கூறுகின்றன. இவற்றை நாம் ஆவணங்களாகப் பார்க்கவேண்டும்.

மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கான வித்து இங்கே இடப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகளுக்கு எப்போதும் விடுதலைப் புலிகள் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளனர் என்பதைக்கூற விரும்புகிறேன்.

தேங்கிக்கிடக்கும் சமுதாய சூழ்நிலைகள் மாறவேண்டிய ஒரு தேவையுண்டு. அந்தத் தேவையை உணர்ந்து, குறுந்திரைப்படங்கள் அத்தகைய சேவையை ஆற்ற முயற்சி எடுத்துள்ளன. அந்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது என்று மேலும் தெரிவித்தார். (12)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்*
*பண்பிலன் பற்றார்க்கு இனிது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சந்திரிகாவின் அறிவிப்பும்... விடுதலைப் புலிகளின் நிராகரிப்பும்!

இனப்பிரச்சினைத், தீர்வுக்கான சமாதானப் பேச்சு வார்த்தையை தன்னுடன் தொடர்வதற்கு விரும்புவதாக விடுதலைப் புலிகள் தமக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளதாக செய்தியொன்று வெளியான அதேசமயம் அதனை நிராகரித்து விடுதலைப் புலிகள் இணையத்தளமொன்றில் பதில் செய்தி ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

சந்திரிகாவின் இந்தச் செய்தியின் உண்மை, பொய் ஒருபுறமிருக்க, இப்படியானதோர் செய்தியினை வெளியிட்டு தென்பகுதி மக்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தவேண்டிய அவசியம் பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவேண்டிய இன்றைய காலகட்டத்தில் உள்ளது என்பது மட்டும் உண்மை.

எனவே, அத்தகையதொரு செய்தியை அவர் வெறும் வாக்குறுதிகளை மட்டுமே அள்ளிவழங்கும் பிரசாரக் கூட்டத்திலல்லாது ஜனாதிபதி மாளிகையில் வைத்துக் கூறியுள்ளார்.

இதன்மூலம் அவர் சொல்லவிரும்புவதெல்லாம் விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் தன்னுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த விரும்புகிறார்கள் என்ற செய்தியைத்தான்.

இதனை தென்பகுதி சமாதானம் விரும்பும் சிங்கள மக்கள் நம்பவேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்.

இதன்மூலம் தேர்தலில் தனக்கு - அதாவது தனது தலைமையிலான கூட்டமைப்புக்கு அமைதியை நேசிக்கும் மக்களின் ஆதரவு கிடைக்கும் என அவர் விரும்புகிறார்.

அதனால்தான் மனதார சமாதானத்தை அவர் விரும்பாவிட்டாலும் கூட, வாயார அதைப் பற்றிப் பேசிக்கொண்டு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்.

இன்றைய சூழலில் - அதாவது இந்தத் தேர்தல் காலகட்டத்தில் எல்லா வகையான வாக்குறுதிகளையும் விட சமாதானம் தொடர்பான வாக்குறுதிகளையே சிங்கள மக்கள் பெருமளவில் விரும்புகின்றார்கள் என அண்மையில் கொழும்பிலும், வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பீடு தெரிவிக்கின்றது. இந்தக் கருத்துக்கணிப்பீட்டை மேற்கொண்ட ஒரு தனியார் அமைப்பு, சிங்கள மக்கள் யுத்தத்தை மீண்டும் எந்த அரசு ஆரம்பிப்பதையும் விரும்பவில்லையெனவும் சமாதானத்தை முன்னெடுக்க உத்தரவாதம் வழங்கும் கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோதான் தாங்கள் வாக்களிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளதை அடுத்து சந்திரிகா மீண்டும் சமாதானத் தேவதையாக தன்னை சிங்கள மக்கள் மத்தியிலே இனங்காட்டும் முயற்சிகளை பரந்த அளவில் ஆரம்பித்துள்ளார் என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகளுடன் பேசாது சமாதான முயற்சிகள் எதுவுமே - எந்த வகையிலும் சாத்தியமாகாது என்று சந்திரிகாவுக்கு மட்டுமல்ல ரணிலுக்கும் கூடவே தெரியும்.

அதனால் தான் இப்போது இருதரப்பினரதும் தேர்தல்கால மேடைப் பேச்சுக்கள், சமாதானம் என்ற சொல்லையும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பையும் குறித்தே வியூகமிடத் தொடங்கியுள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

சமாதானம் தொடரவேண்டுமா... நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமா... ஐக்கிய தேசிய முன்னணியை ஆதரியுங்கள் என சமாதானத்தை முன்வைத்து தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளும் ரணில் சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவதற்குக் காரணமாக சந்திரிகா - விமல் வீரவன்ச கூட்டணி ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகள் போரை ஆரம்பித்து விடுவார்கள் என்றும் பொது மேடைகளில் முழங்கிவருகின்றார்.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் தன்னையும் தனது தலைமையிலான அரசை மட்டுமே நம்புவதாக சிங்கள மக்களின் மனதில் ஒரு கருத்தியல் அழுத்தத்தை ரணில் ஏற்படுத்த முனைந்துள்ளார்.

அதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் மீளாய்வு செய்யப்படவேண்டும், நோர்வேயின் அனுசரணையாளர் நிலைப்பாட்டை நீக்கவேண்டும், அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக்கொள்ள முடியாது என கொக்கரித்து வரும் ஜே.வி.பி.யுடன் இணைந்து கூட்டணி அமைத்துள்ள சந்திரிகா, ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து எதுவும் கூறாதவராக சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்று புதிர் போட்டுவருகிறார்.

சமாதான எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்பது சாத்தியமற்றது என்பது வெளிப்படையான உண்மையாக இருக்கையில் சந்திரிகா இந்தச் செய்தியை வெளியிட்டிருப்பதன் உள்நோக்கம் இரகசியமானதல்ல.

இந்தப் பொய்யான செய்தியை சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டால் - நம்பினால் - தனது கூட்டணிக்கு தேர்தலில் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்குமென அவர் நம்புகிறார் என்றே உணரக்கூடியதாக உள்ளது.

போரின் பேரால் ஏழாண்டு கால தனது ஆட்சியில் சிங்கள மக்களை ஏமாற்றி - தேசத்தையும் நாசப்படுத்திய சந்திரிகா இப்போது சமாதானத்தின் பெயராலும் பொய்யுரைத்து அதேமக்களை ஏமாற்ற முனைகின்றார்.

அதுவும், விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி அதைச் செய்ய முனைவதுதான் அசிங்கமாக உள்ளதுடன் அவரது பலவீனத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

அவரது பொய்யுரையை உடன் நிராகரித்ததன் மூலம் விடுதலைப் புலிகள் அவரது சமாதானம் மீதான போலித்தனமான நிலைப்பாட்டை மக்களுக்கு உணர்த்தியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

# நாடும் நடப்பும்




# ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் உதவியா?

## சந்தேகம் கிளப்புகிறார் இம்தியாஸ்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, அதன் தேர்தல் நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களைப் பாவித்து வருவது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த வாரம் இந்தியாவிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வந்த பொதி ஒன்று - சுங்க அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது. கொழும்பு நிறுவனம் ஒன்றின் விலாசமிடப்பட்டு வந்த இந்தப் பொதியில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும், ஜே.வி.பியின் தேர்தல் பிரசாரத்திற்கான சுவரொட்டிகளே காணப்பட்டன. இந்தச் சம்பவங்களிலிருந்து பல கேள்விகள் எழுகின்றன.

குறித்த நிறுவனத்தின் முகவரியுடன் இந்தப் பொதிகள் எடுத்துவர, ஏன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயலவேண்டும். இந்தப் பொதிகளை முறையாக எடுத்துவர ஏன் அந்தக் கட்சி முயலவில்லை?.

குறித்த பொதியில் சுவரொட்டிகளே காணப்பட்டன. சுவரொட்டிகள் ஒட்டுவது சட்டவிரோதமானது. இந்த நிலையில் சுவரொட்டிகளை- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ன செய்யப்போகிறது? உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சிறந்த அச்சு நிறுவனங்கள் இருக்கையில் இந்தியாவிற்குச் சென்று ஏன் மலிவான துண்டுப்பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் கொண்டுவரவேண்டும்.

உள்ளூர் வர்த்தகர்களைப் பாதிக்கும் விடயமாக இது அமையுமல்லவா? இந்த நிலைப்பாடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிகு மட்டும்தானா எனவும் இம்தியாஸ் பாக்கர் மாக்கர் கேள்வி எழுப்பியுளளார். (01)

# பொலிஸ்மா அதிபர் வழங்கிய இடமாற்றத்துக்குத் தடை

## பொலிஸ் ஆணைக்குழு வழங்கியது

பொலிஸ் மா அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரின் இடமாற்ற உத்தரவை, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

பெலியத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை பொலஸ் மா அதிபர் இந்திர டீ சில்வா இடமாற்றம் செய்திருந்தார்.

இந்த இடமாற்ற உத்தரவையே - சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தற்போது இடைநிறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட இடமாற்ற உத்தரவுக்குள்ளான பொலிஸ் அதிகாரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என்று நிரூபிக்கும்வரை, குறித்த பொலிஸ் நிலையத்திலேயே அவர் கடமை புரிவார் என்று சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏற்கனவே நான்கு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகளையும் சுயாதீன ஆணைக்குழு ரத்துசெய்துள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவை - தாம் பதவிக்கு வந்தால் கலைப்பேன் என்று அநுர பண்டாரநாயக்க பிரசாரக் கூட்டங்களில் கூறிவரும் நிலையிலேயே பொலிஸ் ஆணைக்குழு தனது அதிகாரத்தைப் பிரயோகித்துவருவது குறிப்பிடத்தக்கது. (01)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அடையாள வேலைநிறுத்தத்தில் நேற்று ஈடுபட்டது.

18 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் 6 தொழிற்சங்கங்கள் இணைந்து உருவாக்கிய - கூட்டுக்குழு பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து, நாடளாவிய ரீதியில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுற்றுநிருபக் கடித இ 3/2004 அமைய, இடை நிறுத்தப்பட்ட படிகளை உடனடியாக வழங்க, புதிய சம்பள அமைப்பு அறிக்கையை உடனடியாக வெளியீடு, ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு சகல படிகளையும் வழங்க ரூ.1500 படியை உடனடியாக வழங்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணத்தினால் - யாழ்.பல்கலைக்கழக ஊழியர்சங்கத்தின் - பாதுகாப்பு, நீர் வழங்கல் பணிகள் தவிர அனைத்துப் பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

அனைவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், ஊழியர் சங்கத்தினால் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தொடர் போராட்டம் நடத்தப்படலாம் எனவும் - யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# வைத்தியர் போராட்டம் தொடர்ந்து இடம்பெறுகிறது

(கொழும்பு)

அரசாங்க வைத்தியர்களின் வேலை நிறுத்தப்போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது.

காபந்து அரசின் மூலமாக, வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலிருப்பதாக - நிதியமைச்சர் சொக்ஸி கொடுத்த உறுதிப்பாடுகளையும் வைத்தியர்கள் ஏற்கமறுத்து வருவதாகவும் தெரியவருகிறது. வைத்தியர்களின் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். (01)

தேர்தல் களம் 2004 - நேர்காணல்


செந்தணன்

**நடைபெறவுள்ள இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலைத் தமிழர்கள் ஒன்றுபட்ட சக்தியாக உலகிற்குக் காட்டக் கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பாக கருதிக்கொள்ளும் இந்த நிலையில், நமது ஈழநாடு யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களைப் பேட்டி கண்டு பிரசுரித்து வருகிறது.**

**அதனடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒரு அங்கமான ஈ.பி.ஆர். எல்.எவ் எனும் கட்சியின் தலைவரான சுரேஸ் பிரேமச்சந்திரனது பேட்டி இந்தப்பகுதியில் பிரசுரமாகின்றது.**

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காக அனைவரும் உழைக்கவேண்டும்

ஈ.பி.ஆர்.எல்.எவ். இரண்டாகப் பிரிந்து, வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழு அரசாங்கத்தோடு இணைந்து பல காட்டிக்கொடுப்புக்கள், கொள்ளைகள், கொலைகள், ஆட்கடத்தல் போன்றவற்றை ஈ.பி.டி.பியினருடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றபோதும்,



தமிழ்த்தேச விடுதலைக்கு ஒன்றுபட்ட தமிழரின் உழைப்பே அவசியம் என்பதை உணர்ந்து, இன விடுதலைக்கான பாதையைத் தேர்ந்தெடுத்து, அதன் வழி செயற்பட்டு வருகிறார்.

கடந்த பொதுத் தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், விருப்பு வாக்கடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினராகாத நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் தனக்கென ஒரு இடம் உண்டெண்பதை உணர்த்தியவர்.

**இதுவரைகாலமும் இடம்பெற்ற தேர்தல்களையும் விட வேறுபட்ட முக்கியத்துவத்தினை இந்தத்தேர்தல் தமிழ்மக்களுக்கு வழங்கியிருக்க காரணமென்ன?**

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்பது - பல்வேறு தமிழ்க்கட்சிகள் இணைந்த ஒரு தொகுப்பு. பல்வேறு கட்சிகள் என நான் இங்கு கூறுவது கடந்தகாலங்களில் ஆயுதமேந்தி விடுதலைக்காக போராடிய கட்சிகளும், அகிம்சை வழியில் வந்த கட்சிகளும், இவற்றுடன் தமிழ் மக்களின் பல்வேறு அமைப்புக்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்ததாகத்தான் இன்று உண்மையாகவே இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது.

இந்தத் தமிழ்க் கூட்டமைப்பு ஏன் உருவாக்கப்பட்டது? அதன் செயற்பாடு என்ன என்பதை நாம் நோக்குவோமாயின் அது முற்றுமுழுதாக தமிழ் மக்களின் சுதந்திரத்தை, அவர்களது அபிலாசைகளை வென்றெடுக்கும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டுள்ளது என்பதை நோக்க முடிகிறது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தினை நோக்கினால் தெரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத் திட்டங்கள், எதிர்காலச் சிந்தனைகள் என்பதை நாம் அதில் தெளிவாக கூறியுள்ளோம்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு அதிஉயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படக்கூடிய பிரச்சினை உள்ளிட்ட பல சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதற்காகவே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, பேச்சுவார்த்தையை இலங்கை அரசாங்கம் (எதுவாக இருந்தாலும்) மேற்கொண்டு நாட்டில் சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்பதையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுததியுள்ளது.

நமது கட்சி அரசியல் ஆசைகளுக்காகவோ, அற்ப சொற்ப சலுகைகளுக்காகவோ எதனையும் பேசவில்லை. தமிழ் மக்களுக்கு கடந்த 25 வருட யுத்தத்தால் ஏற்பட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன.

தமிழ் மக்களின் தேவைகள் ஏராளமானவை. குறிப்பாக கிராமப் புறங்களில் வாழும் பல மக்கள் வீதி வசதி, மின்சார வசதி என எதுவுமே அற்ற நிலையில் அவர்கள் வாழ்வதை நாம் சென்று பார்த்துள்ளோம்.

இந்த ஏழை எளிய மக்கள் படும் துன்பங்களை நீக்கவேண்டும். இன்னுமோர் யுத்தத்திற்கு நாம் போகக் கூடாது. தமிழ் மக்களுக்கு 'கௌரவமான தீர்வே தற்போது அவசியம்.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான தீர்வை எட்டுவதற்கு ஓர் சுயாட்சியையே நாம் இன்று வலியுறுத்தி நிற்கின்றோம். அதற்கு இலங்கையில் புதிதாக அமையப் போகும் அரசு உடன்படாவிடின், எமது தேசியத்திற்கான அங்கீகாரத்தை உலகளாவியரீதியில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அந்த வகையில், தமிழர்களின் ஆயுதமேந்திய உரிமைப் போராட்டத்தினை மற்றுமோர் கட்டத்திற்கு நகர்த்துவதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கரத்தை வலுப்படுத்துவதற்கு, சர்வதேசரீதியாக எமது போராட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவதற்கு எனப் பலமுனைகளிலும் இந்தத் தேர்தல் முக்கியம் பெறுகிறது.

எனவே, இந்தத் தேர்தல் வெறுமனே வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்ட பொய்யான பிரசாரங்களுக்கு அப்பாற்பட்ட ரீதியில், இடைக்கால தன்னாட்சி அதிகாரம் என்பது பெறப்பட்டு, அதனூடாக தமிழ்மக்களின் வேலையில்லாப் பிரச்சினை, கடற்தொழிலாளர் பிரச்சினை, உயர்பாதுகாப்பு வலயப்ப பிரச்சினை என அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட நடவடிக்கை எடுப்பதற்குத் துணைபுரியப்போகிறது.

தமிழின தன்னாட்சி அதிகாரத்தினைப் பெறுவதற்கான அழுத்தத்தை நாம் வழங்குவதற்கு, மக்கள் ஆணை எமக்கு வேண்டும். அதனடிப்படையில் இந்தத் தேர்தல் முக்கியம் பெறுகிறது.

எனினும் சிலர் தாமும் தமிழரின் தன்னாட்சி அதிகாரத்திற்காகவே தேர்தலில் போட்டியிடுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

குறிப்பாக ஆனந்தசங்கரி இதனை வலியுறுத்தி வருகிறார். ஒரு தனிநபர் ஏனைய எல்லோரையும் எதிர்த்து, இந்தத் தமிழ்த்தேசியத்தினை கட்டிக்காக்க முடியுமா? நிச்சயமாக இல்லை.

ஏனெனில், ஒட்டுமொத்தமாக தமிழ்மக்களின் உணர்வலைகளாக ஒன்றுபட்டு நிற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும், தமிழரின் உறுதியையும் உடைத்து தமிழரிடையே பிரிவினை உண்டென உலகிற்கு காட்ட முயற்சிக்கிறார் என்பது, அனைத்துத் தமிழ் மக்களுக்கும் தெரியும்.

எனவே, ஈ.பி.டி.பியோ அல்லது ஆனந்தசங்கரியோ அர்த்தமற்ற வாக்குகளைப்பெற்று தமிழரின் ஒற்றுமைத் தன்மையை உடைக்க எடுக்கும் முயற்சிகள் மக்களால் முறியடிக்கப்படும் என நம்புகிறேன்.

இங்கு ஒரு விடயத்தை குறிப்பிட வேண்டும். தமிழ் மக்களுக்கு மிகவும் விரோதமாகச் செயற்படும் சிங்களக் கட்சிக்குள் ஒன்றாக விளங்குவது ஜே.வி.பி. அதனுடன் இணைநது நிற்கிறது பொதுஜன ஐக்கிய முன்னணி. அந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அல்லது அவ்விருகட்சிகளையும் ஆதரிக்கும் நிலையில் ஈ.பி.டி.பி வெளிப்படையாகவே கருத்து வெளியிட்டு வரும் நிலையில் மீண்டும் யுதத்ம் ஏற்படுவதையே அவர்கள் விருமபுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பை எம்மிடம் தாருங்கள். புலிகளையும், தமிழர்களையும் ஒருகைபார்க்கிறோம் எனக் கங்கணம் கட்டிக் நிற்கும் ஜே.வி.பியுடன் கைகோர்த்து நிற்கும் ஈ.பி.டி.பி - தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவது நியாயமற்றது.

வேலை பெற்றுத்தருகிறோம் என்கிறார்கள், கோயில் கட்டித் தந்தார்கள், உதவிகள் செய்வதாக உறுதியளித்துள்ளார்கள் என்பதை நம்பி, - 25 வருடப் போராட்ட வரலாற்றை கொச்சைப்படுத்தும் வகையில் எமது மக்கள் ஏமாந்து போய்விடக் கூடாது, ஏமாறமாட்டார்கள் என நம்புகிறேன்.

இதனடிப்படையில் இன்று அனைத்து மக்களும் ஒன்று திரண்டு நன்று - தமிழரின் போராட்டம். உணர்வலைகள், சமாதானம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு அனைவரும் வாக்களித்து, எம்மை நாடாளுமன்றத்திற்கு தங்கள் பிரதிநிதியாக அனுப்ப வேண்டியுள்ளதால், இந்தத் தேர்தலில் அனைத்துத் தமிழர்களும் வாக்களிக்க வேண்டிய கட்டாயம், கடப்பாடு உண்டு.

அந்த வகையில் இந்தத் தேர்தல் தமிழர்களுக்கு முக்கியம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது.

**ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியிலிருந்த நீங்கள் - தமிழர்கள் ஓரணியில் நிற்க வேண்டும் என்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் செய்படுகிறீர்கள். இந்த நிலையில் பிரிந்து நிற்பவர்கள் பற்றிய தங்கள் கருத்து என்ன?**

இன்று முக்கிய பிரச்சினையாக இருப்பது தமிழ் மக்களின் பிரச்சினைக்குச் சரியான தீர்வு எட்டப்படாமல் இழுபறி நிலை நீடிப்பது.

இதனை ஜனநாயகரீதியில் தீர்ப்பதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனையுடன் கடந்த முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அதாவது, 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் நாம் ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டோம. அதில மக்கள் எம்மை அதிகம் வரவேற்றார்கள்.

இன்று பத்திரிகைகளைப் பார்த்தீர்களானால், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் ஒரு பிரிவாக இயங்கிவரும் வரதர் அணியினர் - வெறுமனே ஈ.பி.ஆர். எல்.எவ் என்றே கூறுகின்றனர். வரதர் அணி என்று குறிப்பிடுவதைத் தவிர்த்துள்ளார்கள்.

இதிலிருந்து அவர்களின் தவறு, துரோகத்தனத்தை உணர்ந்து, அவர்களே வெட்கப்படும் நிலை உருவாகி இருப்பதனைக் காணமுடிகின்றது. இதனாலேயே அவர்கள் வரதர் அணி என்பதை தற்போது மூடி மறைத்து வருகின்றனர்.


இதேபோல் ஈ.பி.டி.பியை எடுத்துக் கொண்டால், அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெளிவாகக் கூறுகிறார் -

தான் அமைச்சராக இருந்தால் மக்களுக்கு உதவ முடியும் என்கிறார். மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமான் குறிப்பிடுவது போல் ஆளும்கட்சியுடன் இணைந்தே மக்களுக்கு சேவையாற்றப் போவதாக கூறி வருகின்றார்.

> **வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான தீர்வை எட்டுவதற்கு ஓர் சுயாட்சியையே நாம் இன்று வலியுறுத்தி நிற்கின்றோம். அதற்கு இலங்கையில் புதிதாக அமையப் போகும் அரசு உடன்படாவிடின், எமது தேசியத்திற்கான அங்கீகாரத்தை உலகளாவியரீதியில் பெற்றுக் கொள்ளவேண்டும்.**

கடந்தமுறை முதல் அமைச்சராக இருந்த சமயம் எவ்வளவு தொகைப் பணத்தை மக்களைக் காட்டிக்கொள்ளையடித்தார் என்பது அனைவருக்கும் தெரியும். கண்துடைப்பிற்காக மக்களுக்கு ஏதே ஒரு சிலதைச் செய்துவிட்டு, இன்று மக்களையும் தனது தேசத் துரோகத்திற்கு உட்படுத்த எண்ணுகிறார்.

இதேபோல் தமிழர் விடுதலைக்



கூட்டணியின் எந்வொரு கூட்டத்திற்கும் சமூகமளிக்காது, தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நிற்பதை எதிர்த்ததோடு, ஒரு காலகட்டத்தில் தந்தை செல்வாவையே விமர்சித்திருந்தவர் - இன்று தந்தை செல்வாவின் வாரிசாக தன்னைக் காட்டிக் கொண்டு விளம்பரம் வெளியிடுகின்றார்.

அன்று கட்சி பேதங்களை மறந்து, ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா முதலானோர் ஒன்றுபட்டு நின்றனர்.

இன்று இந்தப் பெரியவர்கள் மதித்த கட்சியையும், அதன் சின்னத்தையும் நீதிமன்றம் வரை கொண்டு சென்று முடக்கிவிட்டு, அவர்களின் வாரிசாக தன்னைக் குறிப்பிடுவது நியாயமா? இதனைத் தமிழ் மக்கள் ஏற்பார்களா? நடைபெறப்போகும் தேர்தல்தான் இத்தகைய பதவி ஆசைபிடித்த பிரிவினைக் காரருக்கு சரியான தீர்ப்பு அளிக்கவேண்டும்.

ஓய்வூதியம் எடுத்துக் கொண்டு வீட்டிலிருக்க வேண்டிய வயதையும் தாண்டிய நிலையில் இன்று எழுபத்து ஐந்து வயதைத் தாண்டியும் நாடாளுமன்றத்தில் ஒரு கதிரையைப் பிடித்து அரச செல்வாக்கையும், சுகத்தையும் அனுபவிக்க எண்ணும் இவரது பேராசை எவருக்கும் தெரியாத ஒன்றல்ல.

உண்மையில் பதவி ஆசை அவரிடம் இல்லாதிருந்தால், இளவயதுத் தலைமுறைக்கும், தமிழ் தேச ஒற்றுமைக்கும் இடமளித்து ஒதுங்கியிருக்க வேண்டும். அவர் அப்படிச் செய்யாது தமிழ் மக்களுக்காக கதிரை ஏறவுள்ளதாகக் கூறுவது பெரும் துரோகத்தனமான செயல் என்றே கூறவேண்டும்.

தனிமனிதனாக நின்று சங்கரியால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்பதை தந்தை செல்வாவும், ஜீ.ஜீ பொன்னம்பலமும் அன்றே உணர்ந்தார்கள். அதனால் தான் பின் ஆயுதப் போராட்டத்தினை வலியுறுத்தினர்.

இன்று தமிழர் மதிக்கப்படக் காரணமே, இந்த ஆயுதப் போரால் கிடைத்தது. அப்படி இருக்கும்போது ஆனந்த சங்கரி தான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பாராம் தனக்கு வாக்களியுங்கள் என தமிழ் மக்களை முட்டாள்கள் என எண்ணி விளம்பரம் போடுகின்றார்.

இந்தத் தனிநபரும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக அரச அடிவருடிகளாகச் செயற்படும் ஈ.பி.டி.பி யையும் பெயர் சொல்ல வெட்கப்படும் ஈ.பி. ஆர்.எல்எவ் வரதர் அணியையும் பொருட்டாக கருதமாட்டார்கள் தமிழ் மக்கள்.

அவர்கள் தாமாக முன் வந்து தமது பிழைகளைத் திருத்திக்கொண்டு, தமிழர்களுக்கு சேவையாற்றித் தமது பாவச் செயல்களுக்கு கழுவாய் தேடிக்கொளவதே நல்லது.

**உங்களுடைய ஆதரவாளர்களுக்கு இந்தத் தேர்தலின் மூலம் நீங்கள் கூறவிரும்புவது என்ன?**

உண்மையில் கடந்தமுறை தேர்தல் முடிவடைந்ததும் எனது ஆதரவாளர்கள் நான் வெற்றி பெற்று நாடாளுமன்றம் செல்வேன் என எதிர்பார்த்திருந்தனர்.

ஆனாலும், சொற்ப விருப்பு வாக்குகள் வித்தியாசத்தால் எனக்கு நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்புக் கிட்டாமல் போனது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சி உறுப்பினர்ளும் நடாளுமன்றில் பிரதி நிதித்துவம் பெறுவது அவசியம் - அப்போது தான் நாடாளுமன்றில் ஒருமித்த எமது கருத்தை வெளிப்படுத்த முடியும். அதற்கு இம்முறை மக்கள் சந்தர்ப்பம் அளிப்பார்கள் என எண்ணுகிறேன்.

விருப்புவாக்கு முக்கியம் பெறுவதால் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் யாழ். மாவட்டத்தில் நான் ஒருவன் மாத்திரமே போட்டியிடுகின்றேன் என்பது அனைவருக்கும் தெரியும் அதனால் மக்கள் என்னை நாடாளுமன்றிற்கு அனுப்ப ஆவண செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இந்தத் தேர்தலில் வெற்றிபெறுவதனூடாக எமது கட்சியைச் சிறநத முறையில் நிறுவனப்படுத்தி செயற்படுத்த முடியும் என நான் நம்புகிறேன். நான் கடந்த இரண்டு வருடங்களாக இந்தத் தமிழ் தேசியக் கூட்ட மைப்பு உடைநதுவிடக்கூடாது என்பதற்காகப் பல வழிகளில் பாடுபட்டிருக்கின்றேன். தொடர்ந்தும் ஒற்றுமைக்காக உழைப்பேன்.

இன்று கிழக்கில் கருணா எனும் தனிமனிதன் எடுத்த திடீர்முடிவானது, உறுதியாக இருக்கும் தமிழர் தரப்பை கேள்விக்குறியுடன் பார்க்க வைத்துள்ளதுடன், பல தமிழ் மக்களை இரத்தக் கண்ணீர் வடிக்கும் அளவிற்கு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இது பாரிய பிரச்சினை இல்லை தமிழீழ விடுதலைப் புலி களின்தலைமையின் உறுதியும், தீர்க்கமான முடிவும் எதனையும் வென்றுவிடும் அதனை நாம் அனைவருமே அறிவோம்.

## காஸாவிலுள்ள அகதிமுகாம்மீது

# இஸ்ரேலிய படையினர் தாக்குதல்; இரண்டு பலஸ்தீன இளைஞர் பலி!

காஸாவின் தென்பகுதியில் அகதிமுகாமொன்றின் மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை டாங்கிகள், ஜீப்வண்டிகள், புல்டோசர்களின் உதவியுடன் இஸ்ரேல் படையினர் ரபா முகாம் மீது முற்றுகை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்தவேளையில் இஸ்ரேலிய படைவீரர்களினால் உபயோகிக்கப்படும் பாதையொன்றில் நிலக்கண்ணிகளை பொருத்தமுற்பட்டவேளையில் ஹெலிகொப்டர்களிலிருந்து இஸ்ரேலிய படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாககுதலில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பூட்டிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பலஸ்தீன தற்கொலைப் போராளிகளினால் அஷ்மெட் என்ற துறைமுக பிரதேசத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 10 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இத்தாக்குதலுக்குக் பதிலடி கொடுக்குமுகமாகவே இஸ்ரேலிய படையினர் ரபா முகாம் மீது முற்றுகையை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் இத்தாக்குதலில் 8 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேற்றுமுன்தினம் காஸாவிற்கு வெளியில் இஸ்ரேலிய படையினரால் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு தாக்குதலில் 2 பலஸ்



தீனர்கள் கொல்லப்பட்டும், 12 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இரு தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவீக்கப்படுகிறது. இத்தாக்குதலை பலஸ்தீன அமைச்சர் சாயிப் எறிகற் கண்டித்திருந்தார். இந்தச் சம்பவத்தின் பின்னர் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனுக்கும் பலஸ்தீன பிரதமர் அகமட் கூரேயிற்கும் இடையே ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சந்திப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

# அமெரிக்கப் படைச்சிப்பாய் மீளவும் ஈராக் செல்ல மறுப்பு

அமெரிக்க புளோரிடா மாநில தேசியப் படைவீரரான கபிலோ மெஜியா என்பவர் ஈராக்கில் கடந்த வருடம் ஐந்து மாதங்கள்வரை கடமையாற்றியுள்ளார்.

தற்போது விடுமுறையில் அமெரிக்கா திரும்பியுள்ள இவர் மீளவும் ஈராக் சென்று பணிபுரிய மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால், இவர் படையணியில் இருந்து தப்பியோடியுள்ளார் என்ற காரணத்தைக் காட்டி ஜோர்ஜியா நீதிமன்றில் இவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவர் பத்திரிகையாளருக்குத் தெரிவித்த கருத்தில்-

ஈராக்கில் எண்ணெய் வளத்திற்காகவே அமெரிக்கா இந்தப் போரை நடத்துகின்றது. இதற்காக நான் போராட விரும்பவில்லை. மற்றைய படைவீரர்களும் இதற்காக போராடுவார்கள் என நான் நினைக்கவில்லை.



அத்துடன், ஈராக்கில் மறைந்திருந்து எனது படைப்பிரிவின்மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களாலும், இதன்பின் நடைபெறும் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் சிக்கிப் பலியாவதாலும் எனது மனநிலை குழம்பிப்போயுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம்



(இஸ்லாமாபாத்)

தலிபான், அல்கொய்டா ஆகிய தீவிரவாதக் குழுக்களுக்கெதிரான போர்நடவடிக்கைகள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பிரதேசங்களில நடைபெறும்வேளையில், அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் ஆப்கானிஸதானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானின் தென் பகுதியான வசிரிஷ்தானில் இடம்பெற்ற சண்டையில் 30 பேர்வரை கொல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இப்பிரதேசம் ஆப்கானிஸ்தானுக்கு முன்பக்கத்தில் அமைந்துள்ள மலைப் பிரதேசமாகும். இதனிடையே பவலின் ஆப்கானிஸ்தானுக்கான விஜயத்தில் ஜனாதிபதி ஹமிட் காசாயை காபூலில் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் பாதுகாப்பு, அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஆப்கான் ஜனாதிபதியுடன் உரையாடுவதற்குப் பவல் திட்டமிட்டுள்ளார். மேலும், அல்கொய்டாவின் தலைவர் பின்லேடனை கைதுசெய்யும் நிலைக்கு இரு நாட்டுப் படைகளும் நெருங்கி வந்துள்ளதாக ஊகிக்கப்படும் வேளையில் பவலின் விஜயம் அமைந்துள்ளதாக பி.பி.சி யின் கிரிப்பின் தொரோல்ட் தெரிவித்தார்.

இதேவேளையில் நேற்றுமுன்தினம் தென் வசிரிஷ்தானில் பாகிஸ்தான் படைகளுக்கும், தலிபான் போராளிகளுக்குச் சார்பான பாகிஸ்தான் பழங்குடி மக்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் 2 படைவீரர்களும், 8 போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இறுதியாக நடைபெற்ற மோதலில் 8 படைவீரர்களும் 24 சந்தேகத்திற்கிடமானவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அநேகமானவர்கள் பாகிஸ்தான் பழங்குடி மக்கள் எனவும், இவர்கள் போராளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் செச்சினியப் போராளி எனவும் கருதப்படுகிறது.

மேலும் பாகிஸ்தான் படையினர் வனா என்ற கிராமத்தில் அல்கொய்டா போராளிகளுக்கு புகலிடம் கொடுத்துள்ளனர் எனக் கருதப்பட்டு பழங்குடி மக்களைக் கைதுசெய்ய முற்பட்டவேளையில் மோதல்கள் ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கெயிட்டியின் புதிய அரசை அங்கீகரிக்க வெனிசுலா, ஜமேக்கா நாடுகள் மறுப்பு!



வெனிசுலா, ஜமேக்கா நாடுகள் கெயிட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசை அங்கீகரிக்க மறுத்துள்ளன. கெயிட்டியில் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தினால் முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட்டின் ஆட்சியில பங்குகொண்டிருந்த அமைச்சர்கள் விலக்கப்படடுள்ளனர்.

இதனால் புதிய பிரதமர் ஜெராட் லட்ரோட்ருவினால் அமைக்கப்பட்டுள்ள அரசிற்கு - முன்னாள் ஆளும் கட்சியான லபலாசின் அங்கத்தவர்களினால் ஆட்சேபம் தெரிவிககப்பட்டுள்ளது. இதேவேளை முன்னாள் கெயிட்டி ஜனாதிபதி அரிஷ்டைட்டிற்கு அரசியல் புகலிடம் வழங்குவதற்கு வெனிசுலா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வெனிசுலாவின் ஜனாதிபதி கூகோ சவேஷ் கருத்துத் தெரிவிக்கும்போது - கெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எனக் குறிப்பிட்டார்.

ஜமேக்காவும் இதே விதமான கருத்தையே தெரிவித்திருக்கிறது. அடுத்தவாரம் கரிபியன் நாடுகளில் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இறுதிமுடிவை அந்த மாநாட்டின் பின் தெரிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஜமேக்கா வெனிசுலா ஆகிய நாடுகளின் கருத்துக்களால் அமெரிக்காவிற்கும், அந்நாடுகளுக்குமிடையேயான உறவுகளைப் பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே புதிய பிரதமர் ஜெராட் லட்ரோட்ருவின் அமைச்சரவையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அரசியலில் பணிபுரிந்த அனுபவங்கள் கிடையாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையில் பணிபுரிந்தவர்கள் அரசாங்க அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையில் பொருளாதார நிபுணராக கடமையாற்றிவரும் அங்கத்தவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் கெயிட்டி ஜனாதிபதி அரிஷடைட் பலவந்தமாக அமெரிக்காவினால் வெளியேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.




# மற்றொரு தேர்தலிலும் ஜோன் ஹெரி வெற்றி!

(வோஷிங்ரன்)

ஜோன் கெரி - இலிநொயிஷ் மாநிலத்தின் ஆரம்பத்தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். இதனால் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஜோர்ஜ் புஷ்ஷின் தேர்தல் பிரசாரத்திற்கு 140 மில்லியன் டொலர்கள் சேகரிக்கப்பட்டுள்ளது இத்தொகையின் ஒரு பகுதி தொலைக்காட்சி மூலம் பிரசாரங்கள் மேற்கொள்வதற்கு செலவுசெய்யப் படவுள்ளது.

அதிபர் புஷ் தொலைக்காட்சியில் மேற்கொள்ளும் தேர்தல் பிரசாரங்களில் ஈராக் போர்க்களத்திற்குச் செல்லாத பிரத்தியேக படை வீரர்களுக்கு அதிக பணத்தை செலவு செய்வதையோ அல்லது சுகாதார சேவைகளையோ கெரி ஆதரிக்கவில்லை என தெரிவித்தார்.

வரவு - செலவு பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு, வரிகளை புஷ் அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும், இவ்வரிகளை குறைக்க முயற்சித்தால், போர் வீரர்களுக்கான நிதி அதிகரிப்பிற்கு ஆதரவு தெரிவிக்க உள்ளதாகவும் ஹெரி மேலும் தெரிவித்தார்.

## அரசாங்க அறிவித்தல்

### பாராளுமன்றத் தேர்தல்-2004.04.02

**கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான/வாக்களிப்பு எழுதுநர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் 2004 தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி கூட்டங்களில் பின்வரும் இடங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் நடைபெறவுள்ளன. இவற்றிற்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள்/வாக்களிப்பு எழுதுநர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே அறிவிக்கப்பட்டதற்கமைய குறிப்பிட்ட திகதியில் உரிய நேரத்தில் தவறாது அவர்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1. யாழ். இந்துக் கல்லூரி - | 2004.03.20 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 2. இராமநாதன் கல்லூரி - | 2004.03.21 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 3. மானிப்பாய் இந்துக் கல்லூரி - | 2004.03.20 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 4. சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி - | 2004.03.21 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 5. சாவகச்சேரி இந்துக் கல்லூரி - | 2004.03.20 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 6. வேலணை சரஸ்வதி வித்தியாலயம் - | 2004.03.21 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 7. வட இந்து மகளிர் கல்லூரி - | 2004.03.20 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 8. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - | 2004.03.21 - காலை 9.30/மாலை 2.00 மணி |
| 9. கிளிநொச்சி மகா வித்தியாலயம் - | 2004.03.20 - காலை 9.30/மாலை 2.00 மணி |

(சி-2327)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட், 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2325)

திறைஞ்சனைல் சங்கானை
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், லதா, மஞ்சுளா நடித்த
நேற்று இன்று நாளை (புத்தம் புதிய பிரதி)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பி.நே)
STY KIDS - 2
(சி-2262)

சிறு விளம்பரம்
சித்த மருத்துவ சேவை
இருதய நோய், நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, வெண்புள்ளி, சிறுநீரகநோய், பாலியல் குறைபாடு, குழந்தை நோய், நோவு முறிவு எல்லா நோய்களுக்கும், சித்த மருந்துகள், எண்ணெய்கள் பெற்றுக்கொள்ளலாம். பேரறிஞர்:- டாக்டர் பாலசுப்பிரமணியம், சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம், காங்கேசன்துறை வீதி, மதவடி, சுன்னாகம் (பங்குனி 20 முதல் 26 வரை) சந்திக்கவும்) (664)

ராஜா யாழ்ப்பாணம்.
சூர்யா, த்ரிஷா நடித்த



மௌனம் பேசியதே
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)
(சி-2263)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேர்தல் பிரசாரத்தில் முறுகல் யாழ்.நகரில் நேற்று பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பழம் வீதி தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி கட்சியினருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் அப்பகுதியில் பதற்றநிலை உருவாகின.

நேற்று பழம் வீதியில் ஈ.பி.டி.பி பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை அந்தப்பகுதியிலுள்ள கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரது வீட்டுக்கு முன்பாக நின்றிருந்த ஆதரவாளருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெண் வேட்பாளர் வீட்டுக்கு முன்பாக தகாத வார்த்தைகளை பிரயோகித்து ஈ.பி.டி.பியினர் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் -

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் அப்பகுதிக்கு திரண்டு அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கோரியதாகவும்.

இதன்போது ஈ.பி.டி.பியினருக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது என்றும் இதன் பின்னர் மாணவர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து ஈ.பி.டி.பியினர் அவ்விடத்தைவிட்டு விலகியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தவேளை, அப்பகுதிக்கு வந்த கூட்டமைப்பின் வேட்பாளர் இருவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களும், தமது வாகனங்களை வழிமறித்து தம்மிடமிருந்த துண்டுப் பிரசுரங்களை கிழித்து தகாத வன்சொற்களால் பேசியதாகவும் -

இந்த சம்பவம் தொடர்பாக தேர்தல் வன்முறையை கண்காணிக்கும் குழுவினருக்கும், பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒன்றியம் இந்த சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

## கவிதை நூல் வெளியீடு

போராளிக் கவிஞரான அம்புலி எழுதிய மீண்டும் 'துளிர்க்கும் வசந்தம்' எனும் கவிதைத்தொகுதி இன்று வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

இன்றுமாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மகளிர் வெளியீட்டுப்பிரிவு கேட்டுள்ளது.

## கலந்துரையாடல்

கச்சதீவு வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஒருநாள் உற்சவமாகக் கொண்டாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் - மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்களிப்பதற்கான...

யுள்ளார்.

நாளை கொழும்பில் நடைபெறவுள்ள சந்திப்பில் யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன், மட்டக்களப்பு அரச அதிபர் மோனகுருசாமி, வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் உள்ளிட்ட வடக்கு - கிழக்குப் பிரதேச அரச அதிபர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அரச அதிபர்கள் தத்தமது பிரதேச இராணுவத்தளபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடிய பின்னர் தமது முடிவுகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பார்கள்.

இதேபோல் அந்தந்தப் பகுதி இராணுவத் தளபதிகளும் தமது நிலைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பர். இவர்களின் முடிவுகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டதும், தேர்தல் ஆணையாளர் தனது முடிவினை எதிர்வரும் 25 ஆம் திகதி அறிவிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# சமாதான முயற்சிகளில்...

சமாதான முனைப்பை 30 வீதமானோரே வரவேற்றுள்ளனர். 28 வீதமானோர் இந்த இருவருமே சமாதான முன்னெடுப்பை உரியமுறையில் முன்னெடுக்கவில்லையெனத் தெரிவித்தனர்.

பிரதமரின் சமாதான முனைப்பை 50 சதவீதமான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் விரும்புகின்றனர்.

ஜனாதிபதியின் சமாதான முனைப்பை 37 வீதமான சிங்களவர்கள் வரவேற்கும் அதேவேளை- 2.30 வீதமான தமிழர்கள் மாத்திரமே அதற்கு விருப்பம் தெரிவித்தனர்.

கலவி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்ற நடவடிக்கைகளில் பிரதமர் ரணிலை விட ஜனாதிபதி சந்திரிகாவின் எண்ணங்களுக்கு அதிகளவானோரின் ஆதரவு கிடைத்துள்ளது.

யுத்தத்துக்கு எதிராக 75 வீதமானோர் கருத்துத் தெரிவித்தனர். ஊழல்களுக்கு எதிராக ஜனாதிபதியோ, பிரதமரோ தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லையென 39 வீதமானோர் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்வரும் தேர்தலில் 89 வீதமானோர் தமது வாக்குகளைச் செலுத்துவர் என இந்தக் கருத்துக்கணிப்பிலிருந்து தெரியவந்திருப்பதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்தது.

# மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்...

முதன் முதலாக மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தை முன்வைத்தார். அதனால் அவருக்கு சிங்கள ஆட்சியாளரிடமிருந்து அமைச்சர் பதவி கிடைத்தது.

அதன் பின்னர் ஏ.டபிள்யூ தேவநாயகம் என்னும் நடாளுமன்ற உறுப்பினர் மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார். அதனால் அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து அமைச்சர் பதவி கிடைத்தது.

பின்னர் இராசன் செல்வநாயகம் என்னும் அரசியல் அதிகாரி தனது உயர் பதவிக்காக பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார்.

அதைத் தொடர்ந்து செ.இராசதுரை வடக்கே காங்கேசன்துறை தொடக்கம் தெற்கே திருக்கோவில் வரை நமது தாயகம் என்று தொடக்க காலத்தில் முழங்கியவர் கடைசியில் மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தை முன்வைத்தார். அவருக்கும் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து அமைச்சர் பதவி கிடைத்தது.

மட்டக்களப்பு பிரதேசவாதம் அதனுடன் நின்று போகவில்லை. அதற்கு முண்டு கொடுத்துத் தோளில் தூக்கத் தமிழ்த் துரோகிகள் வந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால் தமிழீழப் பெருநெருப்பில் பிரதேசவாதம் எரிந்து சாம்பராகி நெடுங்காலம் ஆகிவிட்டது.

இனிச் சாம்பலுக்கு உயிர் கொடுக்க முடியாது.

- தமிழீழமே தமிழர் தாயகம்

என அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கருணா உருவாக்கிய...

தீர்த்துள்ளதை நான் நன்கு அறிவேன். அதனால், கருணாவின் தற்போதைய அணுகுமுறை எமக்குப் புதிய தொன்றல்ல.

தற்போதைய நெருக்கடி சவாலானது என்பது உண்மைதான். ஆனால், விரைவில் இதற்கு ஒரு முடிவு காணப்படும் என்பதில் எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது .

இந்த நிலைமை குறித்து, எமது தலைமை, குழப்பமடையவோ கோபமடையவோ இல்லை. தலைவர் வே.பிரபாகரன், இது குறித்து அமைதியாக, ஆழமாக, கால அவகாசம் எடுத்து ஆராய்ந்து வருகிறார்.

இந்த நெருக்கடியை நேரடியாக எதிர்கொண்டு களேபரங்களை உண்டு பண்ணும் நிலைப்பாட்டை தவிர்க்கவே தலைவர் பொறுமைகாக்கிறார். எதுவித போராட்டமும் இரத்தக்களரியுமின்றி, இதை முடிவுக்குக் கொண்டுவர நாம் ஏற்கனவே வியூகம் அமைத்துள்ளோம். கருணாவின் கிளர்ச்சி ஒரு தற்காலிகமானது. காலம் அதை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரும்.

அத்தோடு, தமிழர் தேசியப் பிரச்சினை, ஒட்டுமொத்த அரசியற் கொள்கையின் கீழ் அமைந்துள்ள மக்கள் பிரச்சினை. தமிழ் தேசிய நலன்களை உறுதிசெய்யும், மக்களின் விருப்பங்களையும் அபிலாசைகளையும் உள்ளடக்கிய தேசியப் பிரச்சினை.

கடந்த ஐந்து தசாப்தங்களாக, அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட முறையிலும், தங்களது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் மக்கள் போராட்டமே தமிழர் சுதந்திரப் போராட்டம். ஒரு பிரதான தேசியப் போராட்ட அமைப்பின் வரலாற்றுக் கடமைகளையும் வெற்றிகளையும் எதிர்பார்ப்புக்களையும் இலக்குகளையும் ஒரு குழப்பகரமான தனிமனிதன் முறியடிப்பதோ குழப்புவதோ இயலாத காரியம் - நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே மக்களது வரலாற்றுப் போராட்டம் தடையின்றித் தொடரும்.

தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரு குரலாக தேசிய ஒருமைப்பாடு பற்றியும், ஒருமித்த மக்கள் குரலாகவும் ஒலிக்க ஆரம்பித்துள்ள மிகச்சாதகமான காலப்பகுதியில், கருணா இத்தகைய பிரதேசவாதத்தைக் கிளப்பி, மக்களைப் பிளவுபடுத்த முயற்சிப்பது மிகவும் துர்ப்பாக்கியமானது.

பிரபாகரன் பிரதேசவாதத்திற்கு அப்பாற்பட்ட ஒருவர் என்பது கருணாவின் ஆழமான உள்கிடக்கைக்குள் மிகவும் நன்றாகத் தெரியும்.

சாதி, இன, மத, வகுப்புவாத, பிரதேசவாத பிரிவுகள் எதையும் உள்வாங்கிக்கொள்ளாத, புரையோடிப் போன தமிழ் சமூகப் பிரிவினை உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒருவரே பிரபாகரன் என்பதை ஒட்டுமொத்த தமிழ்மக்கள் அனைவரும் அறிவார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்ட காலம் முதலே, தமிழீழமே எமது முழுமையான பிரதேசம் என்பதும், வடக்கும்-கிழக்கும் இணைநத ஒரு பிரதேசமே எமது தேசியப் பிரதேசம் என்பதும், எமது போராட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளாக விளங்குகின்றன.

பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது, ஒருகட்டத்தில பிரபாகரனிற்கு பிரேமதாசா ஒரு செய்தியைப் பரிமாறினார். அதில் வடக்கு மாகாணத்தை தமிழர்களின் தாய்நிலமாக நிர்வகிப்பதற்கான, பூரன அரசியல் சுதந்திரத்தையுடைய மாகாணமாக நிர்வகிப்பதற்குச் சம்மதம் தெரிவித்தார். ஆனால், எந்தவொரு காரணத்தைக்கொண்டும் கிழக்கு மாகாணத்தையோ, கிழக்கு மக்களையோ நாம் கைவிடமாட்டோம் என பிரபாகரன் உறுதிபடத் தெரிவித்திருந்தார் என்றும் இந்தவொரு சம்பவமே பிரபாகரன் கொண்டுள்ள இலட்சிய நோக்குப் பற்றிய தெளிவை ஏற்படுத்தும்.

கருணா கூறுவது போல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 35 நிர்வாகத் தலைமைகள் இல்லை. அரசியல் மற்றும் இராணுவப் பிரிவுகளே இரண்டு பிரதான கட்டமைப்புக்களாக இருக்கின்றன. இதை விடுத்து, நீதி நிர்வாகம், நிதி, கல்வி, புலனாய்வு போன்றன சம்பந்தமான பிரிவுகள் இருக்கின்றன.

இவற்றுக்கான பொறுப்பாளர்கள், அனுபவ முதிர்ச்சி, ஆளுமை, திறமை அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டார்களே தவிர, இவற்றில் பிரதேசவாதமெழுப்பும் எந்தச் செயற்பாடும் இடம்பெறவில்லை.

வடக்குக் - கிழக்கு இரண்டு பகுதிகளிமே போரினால் பெரும் பாதிப்புக்களைப் பெற்ற பிரதேசங்களே. இவற்றினை நிர்மாணிப்பதற்கான பணிக்காகவே இடைக் கால நிர்வாக அலகினைக் கோரியுள்ளோம். வெளிநாட்டு உதவியில்லாமல், தனியே பெறப்படும் வரிப் பணத்தைவைத்து இதனை நடைமுறைப்படுத்துவது சாத்திமற்றது.

நிதிவழங்கும் நாடுகளால் இதற்கென ஒதுக்கப்பட்ட பெருந்தொகைப் பணம் வந்தடையாத ஒரு சூழலில் கருணாவின் குற்றச்சாட்டானது எந்தவித நியாயமுமற்றது.

கருணாவிற்கு அடுத்த நிலையிலிருந்த மூத்த தளபதிகள், அரசியற் பொறுப்பாளர்கள், முதுநிலைப் போராளிகள் உட்படப் பெருந்தொகையான போராளிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிடம் வந்துவிட்டார்கள்.

இப்போது அவருடன் இருக்கின்ற போராளிகளின் எண்ணிக்கை சரியாகத் தெரியாது. ஏனெனில் அவர் இப்போது தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் போராளிகள் பெரும்பாலானோர் இந்தப் போர்நிறுத்த காலத்தில் இணைந்த புதிய போராளிகள்.

போர்க்கள அனுபவமில்லாதவர்கள். இவர்கள் கூட தமிழீழத் தேசியத் தலைவரின் வழிநடத்தலை ஏற்று, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தவர்கள் என்றும், எனவே கருணா அவர்களைப் பலாதகாரமாகவே தடுத்து வைத்திருக்கின்றார்.

கருணாவால் இவ்வாறு பலாத்காரமாக எவ்வளவு நாட்கள் தாக்குப்பிடிக்க முடியுமென்பது தெரியாது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்களிற்கு செய்திகள் சென்றடையாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை கருணாவின் குழு மேற்கொள்கிறது. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் என்ற கோட்பாட்டை இந்தியாவே ஏற்றுள்ளதொரு நிலையில், கிழக்கு மாகாண மக்களின் அபிலாசைகளை வெளிக்கொணருவதைத் தடுக்க முயலும், பிரதேச வாதத்தை ஏற்படுத்தும் கருணாவின் துரோகத்தை வரலாறு மன்னிக்காது.

விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் போருக்குத் தயாராகுவதாகவும், ஆயிரம் போராளிகளை அனுப்புமாறு கோரியதாகவும் கருணா குற்றஞ்சாட்டியது பற்றிக் கேட்டபோது, அவ்வாறனதொரு கோரிக்கையை விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விடுக்கவில்லை என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. விடுதலைப்புலிகள் சமாதான வழியில் பிரச்சினைக்கான தீர்வொன்றிற்கான முயற்சிகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

வன்னிப் பெருநிலத்தில் இடம்பெற்ற சமர்களிலே சண்டைகளில் தமிழீழத்தின் சகல மாவட்டப் போராளிகளுமே பங்கேற்றுள்ளனர். எமது விடுதலைப் போர் பிரதேசவாரியாக அல்லாமல் மையப்படுத்தி நடைபெற்றபோது தமிழர்களின் இதயபூமியான வன்னியைக் குறிவைத்து, தமிழர்களின் இராணுவக் கட்டமைப்பை இல்லாதொழிக்க நாற்பதினாயிரம் படைப் பலத்துடன் ஜயசிக்குறுச்சமர் ஆரம்பிக்கப்பட்ட குறிப்பிட்டபோது இதனை எதிர்ப்பதற்காக எமது தலைமையும் சகல பிரதேசங்களிலிருந்தும் போராளிகளை வரவழைத்து. சகல பிரதேசங்களைச் சேர்ந்த போராளிகளும் மாவீரர்களானர்கள். குறிப்பாக ஜெயந்தன் படையணியின் பங்கு இதில் மறுக்கத்தக்க ஒன்றல்ல.

ஊடுருவற் தாக்குதல்கள், வலிந்த தாக்குதல்கள் போன்ற பல தாக்குதல்களை ஒருங்கிணைத்த ஒரு சமராகவே இது இடம்பெற்றது. இதில் பல பிரதேசப் போராளிகளும் பங்குபற்றினார்கள்.

எனவே ஒரு பிரதேசப் போராளிகளே போராடினார்கள் என்று கூறுவது ஒரு பிரதேச வாதத்தை ஏற்படுத்தும் செயலாகும்.

ஒரு போர்க்கள வீரன் என்ற முறையில், இவ்வாறான மையப்படுத்தப்பட்ட சமர்களின் வெற்றியைத் தீர்மானிப்பது திட்டமிடல், போருபாயம், தந்திரவழிமுறைகள், தேவையான ஆயுதங்களின் பிரசன்னம், வழங்கற்பாதை, தொழில்நுட்ப அறிவு போன்றனவே என்பது கருணாவிற்கு நன்கு தெரியும்.

இதற்கான மூலகாரணமாக, மதிநுட்பமாக விளங்கி இச் சமர்களை ஒருங்கிணைத்தவர் தலைவர் பிரபாகரனே என்பதும் கருணாவிற்குத் தெரியும். மேற்படி காரணங்களே போர் வெற்றியைத் தீர்மானித்தன.

சுமார் 18,000 மாவீரர்களையும், சுமார் 80,000 மக்களையும் விலையாக்கிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை இவ்வாறு பிரதேச ரீதியாக மலினப்படுத்த முயல்வது என்றுமே வெற்றியளிக்காது.

சுமார் 25 வருடங்களிற்கு மேலாக பிரபாகரனுடன் ஒன்றாகச் செயற்பட்டுவருபவன் என்ற ரீதியில் தான் எந்தவிதமானதொரு பிரதேச வாரிச் செயற்பாட்டையும் பிரபாகரனிடம் காணவில்லை. பிரதேசவாதம் குறித்த கருணாவின் குற்றச்சாட்டு உண்மையற்றதும், தவறானதொன்று எனவும் இது போராளிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தவென மேற்கொள்ளப்பட்டதொன்று என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

# வன்னி மாவட்ட...

அதிபருமான கே.கணேஸ் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள், வன்னிப் பிராந்திய இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசிர விஜேயசூரிய, ஓமந்தை உயிலங்குளம் இராணுவச் சோதனைச் சாவடிகளுக்குப் பொறுப்பான இராணுவ உயரதிகாரிகள், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முதலானோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலம்வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் எடுககப்பட்ட முடிவுகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு இன்று அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறுதித் தீர்மானத்தை தேர்தல் ஆணையாளரே எடுப்பார் எனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உளள வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகள் இராணுவச் சோதனை சாவடிப்பகுதிகளான உயிலங்குளம், மடுவீதி, ஓமந்தை ஆகிய இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கு அருகிலேயே அமைக்கப்படவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (01,03)

போராளி கவிஞர் அம்புலியின்
மீண்டும் துளிர்க்கும் வசந்தம்




அறிமுகவிழா

காலம்:- 18.03.04 ( வியாழக்கிழமை)
பி.ப. 3.30
இடம்:- யா/ நல்லூர் நாவலர் கலாசார மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வெளியீட்டுப் பிரிவு - மகளிர்

(666)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.